விலை சதம் 5

பக்கங்கள் 4

உங்கள் தேவைக்கான

சாப்புச் சாமான்கள், புட்டி மருந்துகள், பால் உணவுகள், டின் ஆகாரவகைகள், இங்கிலிஷ் பிஸ்கெட்டுகள் ஆகியவை எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நிதானமான விலையில் கிடைக்கும்.

கே. எம்.
அரிசிமியாப்பிள்ளை & சன்ஸ்,
347, மெயின் ஸ்டிரீட்,
கொழும்பு.
டெலிபோன்: 4586

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)
REGISTERED AS A NEWSPAPER, AT THE G. P. O.

இலங்கை தினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
8 மாதச் சந்தா	ரூ.	6-00
6 மாதச் சந்தா	"	12-00
1 வருடச் சந்தா	"	24-00

மானேஜர்,
"சுதந்திரன்"
194A, தட்டாரத் தெரு, கொழும்பு

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
Phone 3411

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
நாமார்க்கும் குடியல்லேம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து வரு ஐப்பசி மீ 26உ | செவ்வாய்க்கிழமை — Colombo, November, 12. 1947 — ஹிஜிரி 1366 துல்ஹஜ் பிறை 28 | இதழ் 162

நேரு பிறந்த தினத்தைக் கொண்டாட

லண்டனில் ஏற்பாடுகள்

படையெடுத்த மலைஜாதியினர் காஷ்மீரத்திலிருந்து பாகிஸ்தானுக்குள் ஓட்டம்

ஜூனாகத் பற்றி இந்தியா பிரதமருக்கு பாகிஸ்தான் பிரதமர் பதில் தந்தி

நவம்பர் இறுதியில் கூட்டு ராணுவம் கலைக்கப்படும்

லண்டன், நவம்பர். 11

லண்டனிலுள்ள இந்திய அரசியல் ஸ்தாபனங்கள்யாவும் இந்தவாரம் இந்தியாவின் முடிசூடா மன்னரான பண்டித ஜவஹர்லால் நேருவின் 58-வது பிறந்ததின வைபவத்தைக் கொண்டாட மும்முரமான ஏற்பாடுகள் செய்து வருகின்றன.

லண்டனிலுள்ள இந்தியா லீக் அதிவிமரிசையாகக் கொண்டாட்டத்தை நடத்தும். பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அங்கத்தினர் திரு. டபிள்யூ. டொபி தலைமையில் வெள்ளிக்கிழமையன்று கொண்டாட்டம் நடைபெறும் வியாழக்கிழமையன்று லண்டனிலுள்ள இந்திய தொழிலாளர் சங்கத்தார் பார்லிமெண்ட் அங்கத்தினர் திரு. டபிள்யூ. ஜி. கோப் தலைமையில் கொண்டாட்டத்தை நடத்துவார்கள். லண்டனிலுள்ள சுயராஜ்ய மாளிகை ஞாயிற்றுக்கிழமையன்று அதன் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறும்போது நேரு ஜி பிறந்த தினக் கொண்டாட்டத்தையும் நடத்துவார்கள். புதிதாகஸ்தாபிக்கப்பட்ட இந்தியா-பாகிஸ்தான் ஐக்கிய முன்னணி ஸ்தாபனத்தார் இந்தியா பிரதம மந்திரி பண்டித நேருவுக்கு வாழ்த்துச் செய்தியனுப்பிவைப்பார்கள். அதில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் கைச்சாத்திடுவார்கள்.

பண்டித நேரு புதுடில்லியிலிருந்து ஸ்ரீநகருக்கு விமானத்தில் பறந்துசென்றார். அவர் பரமுலாவுக்குஷேக்அப்துல்லாவுடன் விஜயம்செய்வார்.

தோல்வியுற்ற மலைஜாதியினர் ஓட்டம்

புதுடில்லி, நவ 10

காஷ்மீர் மீது படையெடுத்து வந்த வட மேற்கு எல்லைப்புற மலை ஜாதியினர் இந்திய சர்க்கார் துருப்புகளால் தோற்கடிக்கப்பட்டு துரத்தப்பட்டு விட்டனர். அவர்கள் இன்று படுதோல்வி யடைந்தபின் பின்வாங்கி ஓட்டம் பிடித்தனர்.

மொத்தம் மீதமுள்ள 5000 மலைஜாதியினரில் 1300 பேர்கள் மோட்டார் காரிலும் குதிரை டோங்கா வண்டிகளிலும் சைக்கிள்களிலும் ஏறிக்கொண்டும் கால் நடையாகவும் தலை தெறிக்க பின் வாங்கி ஓடினார்கள் பாக்கிஸ்தானுக்கும் காஷ்மீரத்திற்கும் எல்லையாகவுள்ள பாவமிருக்கும் கோஹலா வைநோக்கி காஷ்மீரத்தைக் கடந்து பாக்கிஸ்தானுக்குள் செல்ல 100 மைல் தூரம் ஓட்டம் பிடித்தனர்.

ஸ்ரீ நகருக்கு மேற்கே 30 மைல் தூரத்திலுள்ள டல இராணுவ இந்திய துருப்புகள் கைப்பற்றி 24 மணி நேரமாகியும் அங்கு வசித்து வந்த 13000 ஜனங்களில் 1000 பேர்கள் மட்டுமே இதுவரை திரும்பி வந்து குடியேறியிருக்கிறார்கள். மலை ஜாதியின் போர்வைகளைப் பேர்த்திக்கொண்டு ஹிமாலய மலைப் பகுதிகளில்பதுங்கியிருந்தவர்கள் ஆப்பிள் பழங்கள், உருளைக் கழங்குகள் முதலிய கொள்ளைப் பொருட்களை 280 லொறிகளில் ஏற்றிக்கொண்டு ஓடினர். பிரிகாடீர் எல். பி. சென்னும் அவரது துருப்புகளும் படையெடுத்து வந்தவர்களைத் துரத்தியடித்தனர். மராமந்தாப் பகுதிகளில் சிற்சில இடங்களில் மலை ஜாதியினர் பதுங்கியிருக்கக் கூடுமென்றும், அநேகமாக படையெடுத்து வந்தோர் அனைவரும் இப்பொழுது காஷ்மீர் எல்லைக்கு அப்பால் ஓடிப் போய்விட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

கூட்டு ராணுவம்

இந்தியா-பாகிஸ்தான் கூட்டு ராணுவமும் அதன் பிரதம தளபதி ஸர். கிளாட் ஆச்சின்லெக்கின் தலைமைக் காரியாலயமும் நவம்பர் மாதக் கடைசிக்குள் கலைக்கப்பட்டு விடும். கூட்டு ராணுவ சபையின் அடுத்த கூட்டம் நவம்பர் 26-ம் தேதி நடைபெறும். கூட்டு ராணுவ சபை கலைக்கப்பட்டபின் சிறிய அளவில் அப்படிப்பட்ட ஒரு சிறிய சபை அமைப்பது பற்றி ஆலோசிக்கப்படும்

பாக்கிஸ்தான் ஆட்சேபனை

லாகூர் நவ. 10

ஜூனாகத் சமஸ்தான நிர்வாகத்தை இந்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டதை ஆட்சேபித்தும், அங்கிருந்த இந்திய துருப்புகள் வெளியேற வேண்டுமென்று கோரியும், பாக்கிஸ்தானில் சேர்ந்த ஜூனாகத் பிரதேசத்தை ராணுவ பலத்தால் இந்தியா கைப் பற்றியிருப்பதால் இந்தியாவுடன் பாக்கிஸ்தான் சமரச மகாநாடு நடத்த இணங்க முடியாதென்று தெரிவித்ததும் பாக்கிஸ்தான் பிரதம மந்திரி லியாகத்அலிகான் இந்திய பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு பதில் தந்தி அனுப்பியிருக்கிறார்.

பாகிஸ்தான் ஒலிபரப்பு நிலைய காரியாலயம் லாகூரிலிருந்து கராச்சிக்கு மாற்றப்பட்டது. பாக்கிஸ்தான் அமெரிக்காவிடமிருந்து 5 லட்ச ரூபாய்க்கு ஒலிபரப்பு நிலையக் கருவிகள் வாங்குகின்றன, 1948 மார்ச்சு மாதத்திற்குள் கராச்சி ஒலிபரப்பு நிலையம் வேலை செய்ய ஆரம்பிக்கும்.

ராஜாஜி

புதுடில்லி, நவ. 10

கவர்னர் ஜெனரலான திரு. ச. ராஜகோபாலாச்சாரியார் காங்கிரஸ் காரியக் கமிட்டியிலுள்ள தனது அங்கத்தினர் பதவியை ராஜினாமா செய்து விட்டார். அவர் மேற்கு வங்க கவர்னர் பதவியை ஏற்றபோதே தனது ராஜினாமா கடிதத்தை காங்கிரஸ் தலைவருக்கு அனுப்பியிருந்தார். நாளை கூடும் காரியக் கமிட்டி கூட்டத்துல நாட்டை எதிர் நோக்கியுள்ள அநேக பிரச்னைகள் ஆலோசிக்கப்படும்

ஆசிய தொழிலாளர் மகாநாடு

இலங்கையில் அடுத்த ஜூனில் நடைபெறும்

கொழும்பு நவ: 11

அடுத்தவரும் ஜூன் மாதத்தில் இலங்கையில் சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனத்தால் ஆதரவில் இலங்கையில் ஒரு தொழில் மகாநாடு நடைபெறுமும், இலங்கையும் சர்வதேச தொழிலாளர் உலகத்தில் ஒரு ஸ்தானத்தைப் பெற்றுவிடும்.

இம்மகாநாட்டுக்குமுன்புகொழும்பில் சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனம் ஒரு கலைக்கருத்தரங்கை கொழும்பில் ஏற்படுத்திக்கொள்ளுவார்கள்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை புதுடில்லியிலிருந்து திரும்பிய ஆசிய மண்டலத் தொழிலாளர் மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதி திரு. வி. எச். இஸட். பொன்னம்பலம் இவ்வஷயத்தை இங்கு தெரிவித்துள்ளார்.

திரு. பொன்னம்பலம் ஆசிய மண்டலத் தொழிலாளர் மகாநாட்டில் இலங்கை மற்றும் ஆசிய நாடுகளிலும் பார்க்க மிகவும் முன்னேறியிருப்பதாக தெரிவித்துள்ளதாக இங்கு கூறியிருக்கிறார்.

இலங்கை முற்றாக விவசாய நாடென்றும், இங்குள்ள தேயிலை, ரப்பர், தென்னை பொருள்களை ஏற்றுமதி செய்வதாலேயே தலை தூக்கி நிற்க முடிந்ததென்றும் கூறியதாகத் தெரிகிறது.

இலங்கை சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனத்தில் முழு அங்கத்துவத்தைச் சீக்கிரத்தில் பெற்றுக்கொள்ளுவதற்கு, மந்திரிசபை நடவடிக்கைகளை எடுப்பார்கள். என்று தாம் நம்புவதாகவும் இங்கு திரு பொன்னம்பலம் கூறியுள்ளார்.

ஓடும் லொறியில் இருந்து வீழ்ந்து மரணம்

கொழும்பு, நவ. 11

நுகயகொடையைச் சேர்ந்த கங்கொடைவிலா ஆர். ஏ. எல். முகாமில் வேலைசெய்யும் எனசிரிசேனா (வயது 42) என்பவர் வெளிக்கிழமை ஓடிகொண்டிருந்த ஒரு லொறியில் இருந்து விழுந்ததால் பலத்த காயங்களடைந்தார். இவர் ஜெனரல் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

சயாமின் புதிய அரசாங்கம்

பிரிட்டன் கவனம் செலுத்துகிறது

அரிசி ஏற்றுமதித் திட்டம் பாதிக்கப்படுமா?

சிங்கப்பூர், நவ. 10—

தளபதி சங்க்ராம் திடீர் ராணுவப் புரட்சி செய்து சயாம் அரசாங்கத்தைக் கைப்பற்றிய பின்பு லுவாங் கவீத் அபெய்வாங்ஸே சயாம் அரசாங்கத்தின் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று பாங்காக் ரேடியோ அறிவிக்கிறது. திரு. அபெய்வாங்ஸே 1944-வது வருடத்தில் பிரதம மந்திரியாக இருந்தவர்.

பிரிட்டனின் கவனம்

லண்டன், நவ. 10—

1942-வது வருடத்தில் நேசதேசங்களுக்கு எதிராக ஜப்பானுடன் சேர்ந்து போர் தொடுத்த சயாமின் மாஜி பிரதம மந்திரியான சங்க்ராம் இப்பொழுது ஆதிக்கத்திற்கு வந்திருப்பதால் எதிர்கால நிலைமை எவ்விதமிருக்குமென்பது பற்றி இன்று பிரிட்டிஷ் அந்நியநாட்டுக் காரியாலயம் கவனம் செலுத்திவருகிறது. யுத்தகாலத்தில் நேசதேச விரோதிகளாக இருந்த ஐரோப்பிய நாடுகளுடன் நேசதேசங்கள் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் அவைகளில் பாசிஸம் தலைகாட்டலாகாதென்ற நிபந்தனை இருக்கிறது. ஆனால் சயாம் சமாதான உடன்படிக்கையிலோ அப்படிப்பட்ட நிபந்தனை இல்லை.

சயாமின் புதிய அரசாங்கம்

பாங்காக். நவ 10—

யுத்த காலத்தில் பிரதம மந்திரியாக இருந்த தளபதி சங்க்ராம் சயாம் அரசாங்கத்தைக் கைப்பற்றிய 24 மணி நேரத்திற்குள், அந்நியநாடுகளுக்கு சயாம் செய்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றி வைக்குமென்று அவர் ஓர் அறிக்கை விடுத்துள்ளார். தளபதி சங்க்ராம் தனது தலைமையில் 28 பேர்களடங்கிய ராணுவ சபை ஒன்றை அமைத்தார். 20 பேர்களடங்கிய மந்திரி சபையையும் நியமித்தார். இதுவரை பிரதம மந்திரியாக இருந்த நவஸவத்தும் ஜப்பான் எதிர்ப்பு இயக்கத் தலைவராக இருந்த பனம்யாங்கும் நேற்று ஒளிந்து கொண்டனர். அவர்கள் பாங்காக்கிலேயே இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

ஜினுத் இளவரசர் ரங்க்ஸித் தலைமையில் இளவரசு தானிவாத், லெப்டினன்ட் ஜெனரலான இளவரசு அலாங்கதபியா மன்வரத் ஸேவி, பிரதம தளபதியான ஜெனரல் அதுல் தேஜரத் ஆகியோரடங்கிய 'சுதீம் லடேட் கவுன்ஸில்' என்ற மேலான அரசாங்கசபை ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

புதிய மந்திரி சபையில் உதவி பிரதம தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் பிக்சுன் ஹாவனும் இருக்கிறார்,

அரிசி களஞ்சியமாக கடத்தப்படுவதை விசாரிக்க ராணுவ விசாரணை கோர்ட் நியமிக்கப்படும்.

புதிய மந்திரி சபையில் நேற்றைய புரட்சியில் கலந்துகொண்ட லெப்டினன்ட் ஜெனரல் யோதரக் உளநாட்டு மந்திரியாகவும், முன்னர் 'சுதந்திர சயாம்' இயக்கத் தலைவராக இருந்த பிரமோஜ் நீதி மந்திரியாகவும், முன்னர் அபெய்வாங்ஸே மந்திரி சபையில் பொக்கிஷ மந்திரியாக இருந்த சிரிவசரண் அந்நிய நாட்டு மந்திரியாகவும். லெப்டினன்ட் ஜெனரல் நாகருப் பாதுகாப்பு மந்திரியாகவும், இளவரசு சிவானி பொக்கிஷ மந்திரியாகவும் குக்ரித் பிரமோஜ் உதவிப் பொக்கிஷ மந்திரியாகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

இப்பொழுது 19 வயதுடைய சயாம் மன்னர் லாசேன் சர்வகலாசாலையில் படித்துக்கொண்டிருக்கிறார். அடுத்த வருடம் 20-வதுவயதில் அவர்சிம்மாசனமேறுவார். அதற்கிடையே ராஜப் பிரதிநிதி சபை மாறியிருப்பதால் நிலைமையில் மாறுதல் ஏற்படாது என்று அறிவிக்கப்படுகிறது.

மன்னர் குழந்தைப் பிராயமுதல் லாசேன் நகருக்கருகேயுள்ள கிராமத்தில் தன் தாயாருடன் தங்கி சுவிட்ஜர்லந்து பள்ளிக்கூடங்களில் படித்து வருகிறார்.

அரிசி ஏற்றுமதி

லண்டன், நவ. 10—

ஆசிய நாடுகளுக்கு சயாம் அரிசி மிகவும் தேவையாக இருப்பதால் முந்திய அரசாங்கத்தைப் போல புதிய அரசாங்கமும் அரிசி ஏற்றுமதித் திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றிவரும் என்று இங்குள்ள பிரபல அரிசி வர்த்தகர்கள் கருதுகின்றனர். (ராய்ட்டர்)

இந்திய-இலங்கை போலீஸ் மகாநாடு

மூன்று நாட்கள் விவாதம்

கொழும்பு, நவ 11

இந்திய-இலங்கை போலீஸ் மகாநாடு இவ்வாரத்தில் இலங்கையில் நடைபெறும். இலங்கையில் இவ்விதமான மகாநாடு ஒன்று நடப்பது இதுவே முதற் தடவையாகும். இரு போலீஸாருக்குமிடையில் உள்ள பல சிக்கல்களும் இம் மகாநாட்டில் நன்கு விவாதிக்கப்படுமென்றும் நம்பப்படுகிறது.

அடுத்த வியாழக்கிழமை, மதுரைத் தென் பகுதி பதில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல்; ரயில் பகுதி பதில் இன்ஸபெக்டர் ஜெனரல்; சென்னை ஸி. ஐ. டி. பதில் இன்ஸபெக்டர் ஜெனரல்; மூன்று போலீஸ் சூப்ரண்டுகள்; சுங்க உத்தியோகஸதர் ஒருவர்; கலால் உத்தியோகஸதர் ஒருவர்; ஆகியோர்கள் கொழும்பு வந்து சேர்வார்கள்.

வியாழக்கிழமையன்றே மகாநாடு நடைபெறும். உள்நாட்டு மந்திரி ஸர் ஒலிவர் குணத்திலக்கா மகாநாட்டைத் திறந்து வைப்பார். வெள்ளி சனி வரையும் மகாநாட்டில் விவாதங்கள் நடைபெறும்.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருபவர்கள், தடை செய்யப்பட்ட பொருட்களை கொண்டுவருபவர்கள் முதலிய பிரச்னைகள் சம்பந்தமாக மகாநாட்டில் ஆலோசிக்கப்படும்.

சைக்கிள் திருடியவருக்கு 6 மாதச் சிறை

மட்டக்களப்பு, நவ. 11

கொக்குவிலைச் சேர்ந்த ஏ. குமாரசாமி என்பவர் ரூ. 150 மதிப்புள்ள ஒரு சைக்கிளைத் திருடியதாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் எதிரிக்கு மட்டக்களப்பு மாஜிஸ்டிரேட் திரு. பி. ஸ்ரீகந்தராஜா ஆறு மாதச் சிறைத் தண்டனை விதித்தார்.

அறிவித்தல்

- சிமந்தி:
  இங்கிலீஷ், எமலிக்ஷன் பெல்ஜியம்
- கெல்வனைஸ் நாகத் தகடுகள்
  8 X3 X24'-ம் 8'X3 X20'-ம்
- எஸபஸடொஸ சீலிங் தகடுகள்
  4 x4'-ம் 6'x3'-ம்
- கம்பி ஆணிகள்
  1", 1¼", 1½"-ம், 2"-ம்.
- தீந்தை டிஸடெம்பர் வார்னிஷகள்
- பித்தளை, இரும்பு
- பித்தளையில் கதவு ஜன்னல்களுக்குரிய பூட்டு வகையருக்கள்
- குளிக்கிற அறைகளுக்குரிய சாமான்கள்
- டிரெய்னேஜ், பைப் முதலியவைகள்

இன்னும் கட்டிடங்களுக்கு வேண்டிய எல்லாவித சாமான்களும் இருப்பிலிருந்து கிடைக்கும்

மெஸ்க்கன் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ்,

165, ஆர்மர் வீதி, கொழும்பு.
தெ'போன்:- 4461. தந்தி விலாசம்: "மெஸ்க்கன்"
தபால் பெட்டி 826.

நெல் விவசாயிகளுக்கு பண உதவி

நிறுத்திவிட சர்க்கார் முடிவு

சீனிக் கட்டுப்பாடுபற்றி அறிக்கை

கொழும்பு, நவ 12

அதிக உணவுப் பொருள் உற்பத்திக்காக சர்க்கார் நெல் சாகுபடி செய்பவர்களுக்கு அளித்து வரும் பண உதவியை நிறுத்திவிட முடிவு செய்திருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. இது சம்பந்தமாக கவர்ன்மெண்ட் ஏஜண்டுகளுக்குசர்க்கார் ஒரு சுற்றறிக்கை விடுத்திருக்கின்றனர். பண உதவியை நிறுத்துவதால் அவர்கள் உணவுப் பொருள் உற்பத்திப் பிரசாரத்தைக் கைவிட்டுவிடலாகாதென்று தெரிவித்திருக்கின்றனர்.

சீனிக் கட்டுப்பாடு

உணவு மந்திரியின் நிரந்தரக் காரியதரிசி விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்:-

சீனி கள்ளமார்க்கெட்டில் விற்கப்படுவதாக புகார்கள் தெரிவிக்கப்பட்டதன் காரணமாக உணவு மந்திரி தனது நிர்வாகத்திலுள்ள எல்லா இலாகாக்களின் அதிகாரிகளின் மகாநாடொன்றைக் கூட்டி இதைக் குறித்து ஆலோசனை செய்தார். அதன் பயனாக மானிங் மார்க்கெட்டிலிருந்து சீனிவாங்கிச் செல்லும் வியாபாரிகளை கூர்மையாக கண்காணிப்பு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. வெளியூர்களில் சீனி கள்ளமார்க்கெட்டில் நடமாடுவதைத் தடுக்க பொது ஜனங்கள் ஒத்துழைக்க வேண்டும். அவர்கள் தங்களுடைய அரிசி கூப்பன்களில் தாங்கள் வாரந்தோறும் வாங்கும் சீனியின் அளவையும் குறிப்பிடுபடி சீனி வியாபாரிகளை வற்புறுத்த வேண்டும். வியாபாரிகள் அதற்கு இணங்காவிடில் உடனே வியாபாரி மீது புகார் செய்ய முன்வரவேண்டும் அவர்கள் உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியிடம்புகார் செய்ய வேண்டும். கூட்டுறவு ஸ்டோர்களில் ரேஷன் வாங்குவோர் உதவிக் கூட்டுறவு ரிஜிஸ்டிராரிடம் புகார் செய்ய வேண்டும்.

6500 மூடை கிழங்கு

வியாழக்கிழமையன்று ஐரோப்பாவிலிருந்து கொழும்பு வந்து சேரும் 'சமரிண்டா' கப்பலில் 6500 மூடை உருளைக் கிழங்கு வந்து சேரும்.

பிரபுக்கள் சபை அதிகார வெட்டு

பாராளுமன்றத்தில் முயற்சி

லண்டன், நவ 10

பிரிட்டிஷ் பிரபுக்கள் சபையின் அதிகாரத்தைக் கட்டுபடுத்தும் தீர்மான சம்பந்தமான வாதத்தை இன்று தொழிற் கட்சி அங்கத்தனர் ஹெர்பேர்ட் மொரிஸன் ஆரம்பித்து வைத்தார். இதற்கு ஸர் டேவிட் மாக்ஸ்வெலபே பதிலளித்தார். வாதந் தொடர்கிறது. (ராய்ட்டர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN."
194 ஏ, கட்டாரத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வதித்து ஞ ஐப்பசி மீ 26ஏ
புதன்கிழமை

பாராளு மன்றத்தில் தாய்ப்பாஷை

பிரதிநிதிகள்சபை, செனட் சபை, ஆகிய இருசபைகளிலும் அங்கத்தவர்கள் தங்கள் தாய்ப் பாஷைகளில் பேசுவதற்கு விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது இதுகாலபரியந்தம் ஆங்கிலத்தில் தான் பேசலாம் என்றநியதி இருந்தது. இப்பொழுது அச்சபைகளின் தலைவர்களின் அனுமதியுடன் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய முப்பாஷைகளிலும் பேசலாம். ஆயினும் ஆங்கிலம்தான் பொது பாஷையாக இருக்கும். இச்செயல் வரவேற்கத்தக்கதே தான். தங்கள் தாய்ப்பாஷைகளில் பேசிக் கொள்ளுவதற்கு மந்திரிகள் சந்தர்ப்பம் ஏற்படுத்தியிருப்பது மிகவும் நல்லதே தான் ஆனால் இது, தேசீயப் என்ற போர்வையில் சிங்கள ராஜியம் ஏற்படுத்துவதற்கு முதலாவது படி என்றே நாம் கருதவேண்டியிருக்கிறது

பிரதிநிதிகள் சபையில் நூற்றொரு அங்கத்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுள் முக்காவாசிப் பேர் சிங்களத்தை தாய்ப்பாஷையாக உடையவர்கள். மற்றும் கால்வாசிப் பேரில் தமிழரும் முஸ்லிம்களும் பறங்கியரும், ஐரோப்பியரும் உண்டு. இந்த முறையில்தான் செனட் சபையிலும் அங்கத்தவர்கள் உண்டு. ஆகவே இச்சபைகளில் முக்காவாசிப் பிரதிநிதிகளுக்கு அர்த்தம் புரியும் வகையில் பேசிக்கொள்ளக் கூடிய தாய்ப்பாஷை சிங்களம் தான். அப்பாஷையைப் புரிந்துகொள்ளக் கூடாத மற்றும் அங்கத்தவர்கள் ஊமைகள்தண்டனவுபோலப் பார்த்திருக்க வேண்டியதுதான். ஒரு தமிழ் பிரதிநிதி சமது தாய்ப் பாஷையில் பேசினால் முக்காவாசிக்கு விளங்காது. இன்னும் சிங்கள பாஷையிலும் சண்டித்தனம் சிங்களவர் பேசுவது, மேற்நாட்டுச் சிங்களவருக்கு கிரேக்கபாஷைபோல விருக்கு மென்றும் நாம் அறியக்கிடக்கிறது. எனினும் சிங்கள ராஜ்யத்தில் விளங்கிக்கொள்ளச் செய்வார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக இச்சபைகளின் தலைவர்களுக்கு மூன்று பாஷைகளும் தெரிந்திருக்கவேண்டும். இன்றுள்ள நிலைமையில் எந்த சபையிலும் அப்படி முப்பாஷைகளும் தெரிந்த அங்கத்தவர்கள் கிடையாது. ஒரு அளவில் கண்டி பிரதிநிதியாகிய திரு ஜோர்ஜ ஈ. டி. சிலவாவுக்குத்தான் "கூலிக" தமிழ் தெரியுமாம் கூலிக தமிழ் தெரிந்த ஒருவர் என்ன செய்யமுடியும் எனபது யாவருமறிந்ததே! முப்பாஷைகளிலும் பாண்டித்தியம் தலைவருக்கு இல்லாவிட்டால், தலைவருக்குத் தெரியாத பாஷையைப் பேசும் அங்கத்தவர் வசைபுராணங்களில் இறங்கிவிடலாம் அதை நிறுத்தும் சக்தியும் எவருக்கும் இல்லையல்லவா? ஒரு வேளை மொழிபெயர்ப்பாளர்களை வைத்துக் காரியங்கள் செய்யலாம் என்ற ஆலோசனை எழக்கூடும். இதுதக்கபடியானதாகொடாதென்பதை எவருமறிவர்.

ஆகவே இந்த நிலைமையில் தாய்ப்பாஷைகளில் வாதாடுவதென்பது ஒரு பகுதியினருக்கு கந்தர்கூளமாகவுடியும். பெரும்பான்மைப் பகுதியினருக்கு சிங்களராஜ்யம் ஏற்படுத்த தக்க வசதியையுமளித்துவிட்டதாகும். உருப்படியான காரியங்கள் எவற்றையும் சாதித்துவிடவும் முடியாது

உண்மையில் தமிழருக்கும் மற்றும் சிறுபான்மையினருக்கும் இந்நாட்டில் தக்க உரிமை அளிப்பதாகவிருந்தால், இது அனுபவசாதியமற்றதென்பதை மந்திரிகள் உணர்வர். முதலாவதாக எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் தாய்ப்பாஷை கட்டாய பாடமாக்கப்படவேண்டும். அதுதுடன் தமிழ் மாணவர் சிங்களம் படிக்க வேண்டுமென்றும்; சிங்கள மாணவர் தமிழைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்றும் வித்தியாபகுதிப்பார் மூலம்நியதிஏற்படுத்தவேண்டும் அதன் பின் சிலகால எல்லை நியமிததே தேச சபைகளில் தாய்ப் பாஷையில் பேசும் விதியை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் அக்காலம் ஏற்படும் வரைக்குப் முன் போல் ஆங்கிலத்தில்தான் விவாதங்கள்நடத்தப்படவேண்டும். பசுத்தோல் போர்த்தபுலிபோல பாயும் சில அரசியல் வாதிகளின் பகற்கனவுகளுக்குப் பிரதிநிதிகள் இடங்கொடுக்கவொண்ணாதென்பதே எமது அவா.

சுதந்திர மசோதா டிசம்பரில் சட்டமாகும்?

பர்மா பணக்காரர்களைக் கடத்தும் சீனக் !கள்வர்கள்

சீன ஸ்தானிகரிடம் முறையீடு

லண்டன், நவ. 11

டிசம்பர் மூற்பகுதியில் பர்மா சுதந்திர மசோதா மன்னரின் அங்கீகாரம் பெற்று சட்டப் புஸ்தகத்தில் இடம்பெற்றவிடும் என்று நம்பப் படுகிறது ஹிறிஸமஸ விடுதலைக்கு முன் சட்டத்தை நிறைவேற்றிவிட வேண்டும் என்பதே பாராளுமன்றத் திட்டம் அடுத்தவெள்ளிக்கிழமை கீழ்ச் சபையில் இம்மசோதா 'எடுத்துக்கொள்ளப்படும். பிரபுக்கள் சபையில் இதுபற்றிய சர்ச்சை எப்போது நிகழும் என்பது இன்னும் தீர்மானமாக வில்லை.

பர்மாவில் சீனக் கள்வர்கள்

ரங்கூன், நவ. 10

யூனான் பர்மா எல்லையைக் கடந்து ஹான் பகுதியில் பிரவேசித்து வரும் சீனக் கள்வர் கோஷ்டிகள்பணக்கார வர்த்தகர்களைகடத்திச் சென்று விடுவதாகச் சொல்லப்படுகிறது கொண்டு போகப்படும் வர்த்தகர்களை விடுதலைசெய்ய 'இவ்வளவு தரவேண்டும்' என்று பணம் பறிக்கும் கொள்கையை கள்வர்கள் அனுஷ்டிக்கிறார்கள்

இது சம்பந்தமாக பர்மா அரசாங்கம் சீன ஸ்தானிகரிடம தனது எதிர்ப்பைத் தெரிவித்து முறையிட்டுள்ளது

பர்மாவுக்கு ஆஸதிரேலிய முறைகள்

பழைய பர்மா அயல்நாட்டு மந்திரி ஆஸதிரேலியாவில் உள்ள அரசாங்க சேவை ஸ்தாபன முறை தொழிலாளர் சங்க முறை, தொழிற் பிரசினைகளைத தீர்க்கும் முறை ஆகியற்றைக் கைக்கொள்ளவேண்டும் என்ற அபிப்பிராயதத்தை ராய்ட்டருக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் அரசாங்க ஊழியர் கமிஷனின் தலைவராகத் தரபோது நியமனம் பெற்றுளளார். ஆஸ்திரேலியாவுக்கு அவர் சமீபத்தில் ஒரு சுற்றுப்பிரயாணம் செயவதற்காகச் செல்வார். முன்னொரு தடவை இவர் ஆஸ்திரேலியா போனதாகவும் அங்கு அவர் கண்ட விஷயங்கள் அவர் மனதை அதிமாக கவர்ந்திருப்பதாகவும் தெரிகிறது. (ராய்ட்டர்)

ஜின்னாவுக்கு ஜுரம்

ராவல் பிண்டி விஜயம் ரத்து

லாகூர், நவ 8

பாக்கிஸ்தான் கவர்னர் ஜெனரல் ஜனாப் ஜின்னா ராவல்பிண்டிக்கு விஜயம் செய்வதை ரத்து செய்துவிட்டார்.

ராவல்பிண்டி மக்களுக்கு அவர் அனுப்பிய செய்தியில் 'எனக்கு ஜுரம். அங்கே வர முடியாமைக்கு வருந்துகிறேன் ஆனால், பாக்கிஸ்தான் இலட்சியக் கொடியை ஏந்திப் பிடிக்கிறேனென்று நம்புகிறேன்' என்று அறியிருக்கிறார்.

வால்டர் மாஸ்டனுக்கு ஜின்னா அழைப்பு

கராச்சி, நவ. 9

ஹைதராபாத் நிஜாமின் அரசியல் ஆலோசகர் ஸர். வால்டர் மாஸ்டன் [சமரஸ பேரசு கமிட்டியிலிருந்து ராஜினாமா செய்தவர்] இங்கிலாந்து செல்லுங்கு வந்து சேர்ந்தார். ஜனாப் ஜின்னா தன்னை லாகூரில் வந்து சார்கும்படி அவருக்கு அழைப்பு அனுப்பியிருக்கிறார். மாஸ்டன் ஒரு ஸ்பெஷல் விமானத்தில் லாகூர் செல்கிறார்.

சிதறுண்ட தமிழர்களே! சேரவாரீர்!

தாரணி தன்னில் தமிழரசை நிறுவுவோம்!

சென்னையில் தமிழரசுக் கழகத்தின் முதலாவது மகாநாடு

முரசொலி முழங்க முத்தமிழ்க் கொடி உயர்த்தப்பட்டது

சென்னை, நவ 8—

"தேசியக்கொடி ஒன்று இருக்கும்பொழுது தமிழ்க்கொடி ஏற்றுவது முரண்பாடான செய்கையல்ல. தமிழ்க்கொடி தமிழர்களின் உரிமையைக் குறிக்கிறது. தேசியக் கொடி தமிழர்களின் உறவை குறிக்கிறது" என்று இன்று காலை தமிழரசுக் கழக முதல் மகாநாட்டில தமிழ்க் கொடியை ஏற்றிவைக்கையில் ஸ்ரீ ம பொ சிவஞான கிராமணி கூறினார்

மகாநாடு செயின்ட் மேரி மண்டபத்தில் ஸ்ரீ சிவஞான கிராமணி தலைமையில் இன்று காலை ஆரமபமாயிற்று.

தென் திருவாங்கூர், புதுக்கோட்டை, புதுச்சேரி, சித்தூர் முதலிய இடங்களிலிருந்து சுமார் 200 பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

'தமிழ் நாடு தமிழருக்கே' 'சங்க காலம் மீண்டும்' 'தமிழா தலை நிமிர்ந்து நில்' 'புதிய தமிழகம்அமைப்போம்' என்பன போன்ற மொழிகளைக் கொண்ட அட்டைகள் மகாநாட்டில் தொங்க விடப்பட்டிருந்தன. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ கே. காமராஜ் நாடாரும் வந்திருந்தார்.

தமிழ்க் கொடியை ஏற்றி வைத்து ஸ்ரீ சிவஞான கிராமணி பேசியதாவது:—

வீழ்ந்து கிடந்த தமிழ்க் கொடியை இன்று ஏற்றிவிட்டோம். கம்பத்தின் மீது மட்டுமல்ல தமிழ் நாடு மீண்டும் சிறப்புற்று வளங்க வேண்டுமென்று ஆவலுடன் எதிர்நோக்கும் ஆயிரக்கணக்கான தமிழர்களின் உள்ளதிலும் தமிழ்க் கொடி ஏற்றுவிட்டோம். தேசியக் கொடி இருக்கையில் தமிழ்க் கொடி ஏற்றுவது முரணானது என்று யாரோ கூறினர். அவர் சொன்னது சரியல்ல தமிழர்களின் உரிமையைக் காட்டுகிறது. தமிழ்க் கொடி. தேசியக் கொடி உறவைக் காட்டுகிறது. பண்டைய மரபையும் எதிர்கால மேன்மையையும காட்ட சுதந்திர இந்தியா அசோக சக்கரத்தை ஏற்றுக் கொண்டுள்ளது தமிழ்க் கொடி அசோகர் கொடியை விடப் பழமையானது. அந்த ஆதிக்கத்திற்கும் அது சளைத்ததல்ல

உரிமைகள் மறுக்கப்பட்டால் உறவும் இருக்காது. பழங்கால மரபின் மூலம தான் நாம புதிய தமிழகத்தில் வாழ்க்கை அமைக்க வேண்டும். இந்த மேடையின் மீது முரசு வைக்கப்பட்டுள்ளது. நமது லட்சியம் சித்தியாகும் வரை இம்முரசு முழங்கிக் கொண்டேயிருக்கும்.

வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ தெ. பொ. மீனாக்ஷி சுந்தரம் எல்லோரையும் வரவேற்றுப் பேசினார். வட இந்தியாவில் குழப்பமும் கொள்ளையும் மலிந்தன. பழங்காலத்திலும் அங்கப்படித்தானிருந்தது. இந்நிலையில் இங்கு அமைதி நிலவுவது தென்னிந்தியாவின் பெருந்தன்மையையே காட்டுகிறது.

வட இந்திய சேவைக்கு நம் தலைவர்கள்

ஸ்ரீமான்கள் சி ராஜகோபாலாசாரி, என். கோபாலஸ்வாமி ஐயங்கார், ஆர். கே. ஷண்முகம் செட்டியார் போன்ற தலைவர்களை நாம் வட இந்தியாவில் சேவை செய்ய அனுப்பியுளோம் பழங்காலத்திலும் அறிஞர்களும் தலைவர்களும் தென்னிந்தியாவில்தானிருந்தனர். சுருக்கமாகச் சொல்வதாயின் இந்தியாவில் கலாச்சாரத்தைக் காப்பாற்றியது தென்னிந்தியாவே. வடநாட்டில் எப்போதுமே சண்டைதான்" என்றார் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் தமிழ் நாடெங்கும் மத்திய மாகாண நாடுகளுக்கும் இடையே பழங்காலத்திலிருந்த உறவுகள் பற்றிக் கூறிவிட்டு தமிழ் நாடு அக்காலத்தில் ஒரு வல்லரசாகத் திகழ்ந்தது என்றும் இனியும் தமிழ் நாடுதான் உலகையும் இந்தியாவையும் காப்பாற்ற வேண்டுமென்றும் கூறி எல்லோரும் முன்வந்து உலகுக்கு வழிகாட்டுமாறு ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் வேண்டிக் கொண்டார். ஒவ்வொரு ஊரிலும் தமிழ்ச் சங்கங்கள் ஏற்படுத்தவும் கேட்டுக் கொண்டார்.

ஸ்ரீ மாஜினி அனைவரையும் வரவேற்றுப்பேசுகையில் தமிழ் மாகாணத்தின் அவசியத்தை வற்புறுத்திவிட்டு குமரி முதல் வேங்கடம் வரையில் இடைப்பட்ட நிலப்பரப்பு தமிழருடையதே என்பதை எந்த வகையிலும் நிரூபிக்க முடியும் என்றார் இதற்குச் சான்றாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெயர்பெற்ற இலக்கிய புலவரான பனம்பாரனார் வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம் என்று கூறிபிருப்பதை எடுத்துக் காட்டினார் சென்னை நகரம் தமிழருடையதே என்பதை பலவித ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டினார்.

திருவாங்கூரைச் சேர்ந்த ஸ்ரீ எஸ். கே. ஸ்வாமி பேசுகையில சமஸ்தானத்தில தமிழர் படும் அலல்களை எடுத்துரைத்து பாஷாவாரி மாகாண அடிப்படையில் தனித் தமிழ் மாகாணம் ஏற்படும்போது திருவாங்கூர் தமிழர்களையும் தமிழ் நாட்டில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கோரினார்.

காமராஜ் பிரசங்கம்

த. நா. கா. க. தலைவர் ஸ்ரீ கே காமராஜ் நாடார் பேசுகையில் 'தமிழ் நாட்டின் தலை நகரைப்பற்றி சர்ச்சையோ சந்தேகமோ வேண்டியதில்லை 1931ல் எடுத்த ஜன சங்கியையினபடி சென்னையில தமிழர் 6 லக்ஷம் பெரு மக்கள் என்றும் ஆந்திரர்கள் சுமார் ஒன்றேகால் லக்ஷம் பேர்தான் என்றும் இப்போது ஜன சங்கியை எடுத்தாலும் தமிழர்களே பெரும்பான்மையினராக இருப்பார்கள் என்றும் கூறினார். இக்காரணம் பற்றியே சென்னை ஒரு பொது மாகாணமாக இருக்கவேண்டுமென்று ஆந்திரர்கள் கேட்டதாகச் சொன்னார். இந்த விதை ஒன்றும் நடக்காது; சென்னை தமிழ் நாட்டின் தலை நகரே" என்று கர்ஜித்தார்.

திருவாங்கூர் தமிழ் பிரச்னை பற்றிக் குறிப்பிட்டு த. நா. கா. க. ஏற்கனவே இவ்விஷயமாகத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறதென்றும் இப்பொழுது சமஸ்தானத்திலுள்ளவர்களது பிரச்னைகளைக் கொண்டு வந்து குழப்பாமலிருப்பது நல்லதென்றும திருவாங்கூர் தமிழர் திருவாங்கூருக்குள்ளேயே தனி மாகாணம் கேட்கலாமென்றும் இந்தக் கோரிக்கைக்கு தாம் பூர்ண ஆதரவு அளிப்பதாயும் கூறினார்.

கடைசியில் நேரு சர்க்காரை பலவீனப் படுத்தும்படியான அனாவசியமான அகாலமான கிளர்ச்சிகள் எதுவும் கூடாதென்று கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீ ஸி தாதுலிங்க முதலியார் தனித் தமிழ் மாகாணத்தின் அவசியத்தை வற்புறுத்தினார்.

பிறகு ஸ்ரீ சிவஞான கிராமணி கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம் பிள்ளை படத்தைத் திறந்து வைக்கும்படி திரு. வி. க. வைக் கேட்டுக் கொண்டார்.

திரு. வி. க. படத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில், சமதர்ம சமுதாயத்தைச் சமைப்பதே தமது கொள்கையென்றும் த. நா. கா. க. இந்தக் கொள்கைக்காக போராடும் பக்ஷத்தில் தாமும் அவர்களுடன் சேர்ந்து போராடத் தயார் என்றும் கூறினார்.

சுதந்திரப் போராட்டத்தில் ஆதி முதல் வ. உ. சி. ஆற்றி வந்த தொண்டை விரிவாகக் கூறினார். திலகர் வ உ. சி இவர்களுடைய சேவையின் பயனாகத்தான் நாம் இன்று சுதந்திர மடைந்துள்ளோம் என்றார். பாரதியார்,வ. உ. சி யின் கொள்கைகளையே பின்பற்றியதாகக் கூறினார் ஞானம், தர்மம், வீரம், அஞ்சாமை ஆகியவை அவருடைய குண விசேஷங்கள் என்றும் தூங்கிக்கிடந்த தமிழரைத் தட்டி எழுப்பியவர் என்றும் சிலாகித்துக் கூறினார்.

தமிழ் மறையான குறளின் அறத்துப்பால பகுதியை கல்வி மந்திரி உள்பட சிலர் குறைவாக எண்ணுவதாயும் இது தவறு எனறும எடுததுக் காட்டினார்.

தமிழ் மாகாணம் பற்றி குறிப்பிட்டு எல்லோரும் இப்பிரச்னையில் கட்சி பேதமின்றி ஒன்றுபட்டு உழைக்க வேண்டுமென்றும் வடக்கே வேங்கடத்தையும் தெற்கே குமரியையும் எல்லையாகக்கொண்ட தமிழ் ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

தமிழ்ப் பாஷையின் பெருமையைக்குறிப்பிட்டு தெலுங்கு மலையாளம் முதலிய பாஷைகளில் பெரும்பாலும் தமிழ் கலந்திருக்கிறதென்றார். ஆகையால் விந்திய மலை வரையிலுள்ள இதர மாகாணங்களும் பிறகு தமிழ் நாட்டுடன் உறவு கொண்டு ஒன்று சேர விரும்பும் என்றார்.

ஸ்ரீ சிவஞானகிராமணி தமது தலைமைப் பிரசங்கத்தில் ஏகாதிபதிய எதிர்ப்புப் போரில் வேங்கடத்திற்கு வடக்கேயுள்ள பிற இனத்தாரைக் காட்டிலும் அதிக தியாகங்கள் செய்துள்ள தமிழகத்தார் இனி தம் கன்னிக தமிழ் நாட்டில் விடுதலைக்காகப் பாடுபடவேண்டுமென்று வற்புறுத்தினார்.

மலையாள ஆட்சி கொள்கை கொண்ட குமரி மனையில் ஒழுகான முறையில் இயக்கம் உருவாகிவிட்டதைக் குறிப்பிட்டு பட்டம் தாணு பிள்ளை தமிழினத்தை ஒடுக்க முயல்வதைக் கண்டித்தார். திருவாங்கூர் அரசியலை வரையறுக்கும் மன்றதில் திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரசுக்கு இடமில்லாமல் தான் தோன்றிகளான இரண்டொரு சந்தர்ப்ப வாதிகளை தமிழினத்தின் பிரதிநிதிகள் என்று தாபட்டமடித்து ஏகாதிபதிய பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாளும் பட்டம தாணு பிள்ளை தோல்வியுறுவது தண்ணம் என்றார்.

அடுத்தபடியாக தமிழகத்தில் வடக்கெல்லையைப்பற்றிக் கூறினார், பனம்பாரனார் காலம் முதல் பாரதியார் காலம் வரை தமிழகத்தின் வடக்கெல்லை திருப்பதி மலைதான். 1911 மார்ச் 31உ வரை வட ஆற்காடு ஜில்லாவில்தான் திருப்பதி மலை இருந்தது. இந்த ஜில்லா மீகப் பெரியதாய் இருந்த காரணததினால் அதனைச் சேர்ந்த திருத்தணி கங்குந்தி, கந்திரகிரி, புங்கனூர், பலமனேரி, சித்தூர் தாலூகாக்களையும் கடப்பை ஜில்லாவிலிருந்து மதனபள்ளி வாயல்பாடி என்ற இரண்டு தாலூகாக்களையும் இணைத்து இப்போதுள்ள சித்தூர் ஜில்லா உருவாக்கப்பட்டது, இதன் பின்னர் பானகல் ராஜா முனுசாமி நாயுடு, பொப்பிலிராஜா முதலிய ஆந்திரர்கள் ஒருவர் பின் ஒருவராக மாகாணத்தின் முதலமைச்சர்களாக வந்து ஆட்சி புரிந்த காலத்தில் அங்கெல்லாம் தமிழ் அழிந்து தெலுங்கு ஓங்கியது. தெலுங்கர்களின் ஆதிக்கம் வலுக்கத்து வெள்ளையர் தங்கள் ஆட்சி வசதிக்காக செய்த காரியத்தை ஆந்திரர்கள் தங்கள் இனத்தின் ஆதிக்கத்துக்காகப் பயன்படுத்திக் கெண்டனர்.

தமிழகத்தின் வடக்கெல்லையிலுள்ள தெளிவில்லாத மொழிப் பிரச்னையை முன்னணியில் வைக்காது அவ்வெல்லையின் வரலாறு மனப்பாங்கு 1911 வரை அரசாங்க ஏடுகளிலிருக்கும் ஆகாரம் ஆகியவைகளைக் கொண்டுதிருப்பதியைதிரும்பிப் பெற முயற்சிக்க வேண்டும்.

எல்லைக் கமிஷன் வரும் வரையில் சித்தூர் ஜில்லாவில் ஜன நாயக முறையில் நம்பிரசாரத்தை நடக்க வேண்டுமென்று ஸ்ரீ சிவஞான கிராமணி வற்புறுத்துகிறார்.

புதுக்கோட்டை சமஸ்தானத்தையும் பிரெஞ்சுத் தமிழகத்தையும் தமிழகத்துடன் சேர்க்க வேண்டுமென்றார்.

சென்னை நகரை எல்லைக் கமிஷனின் தீர்ப்புக்கு உட்படுத்தவே விடக்கூடாது என்றார்.

சென்னை மாகாணத்துக்குள்ளேயே ஆந்திரர்க்கு தனி சட்டசபை மந்திரிசபையோடு கூடிய ஒரு நிர்வாக உப மாகாணத்தை உருவாக்க நடக்கும் முயற்சிகளையும எதிர்த்தார்.

அ. நி சபை தயாரித்துள்ள புது சமஷ்டி அரசியலில் தமிழகம் தனி அரசுரிமை கொண்ட ஒரு சுதந்திர அங்கமாயிலாமல் அடிமை மாகாணமாகச் சேர்க்கப்பட்டு பலம்வாய்ந்த மத்திய சர்க்கார் என்ற பெயரால் அதன் வாணிபம் கைத்தொழில் பொருளாதாரம் ஆகிய ஜீவாதார உரிமைகள் பறிக்கப்பட்டிடுகிறது' என்றார்.

கடைசியில் சுதந்திரத் தமிழகத்தின் சோஷியலிஸ குடியரசு பிற இந்திய தேசீய இனங்களின் சோஷியலிஸ குடியரசுகள் அடங்கிய கூட்டரசில் இணைந்திருக்கவே விரும்புகிறது" என்றும் இதற்கு அனைவரும் உழைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

தீர்மானங்கள்

தமிழகத்தைத் தனிநாடாக்குவதில் மத்திய சர்க்கார் தயக்கம் காட்டி வருவதை இம்மாநாடு கண்டிப்பதுடன் இனியேனும் உடனடியாகச் செய்யவேண்டும் என்று வற்புறுத்துகின்றது. மற்றும் ஆறுமாதத்திற்குள் தமிழகப் பிரிவினையை ஏற்படுத்துவதற்காக எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றுபட வேண்டும் என்றும் இம்மகாநாடு வேண்டுகிறது.

இந்தியாவை மொழிவாரி நாடுகளாகப் பிரித்து அதில் வாழும் மக்களுக்கு சோஷியலிஸ குடியரசுகளின் கூட்டரசினை அமைக்க அரசியல் நிர்ணய மன்றத்தார் தவறி விட்டதை இந்த மகாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. மற்றும் பலம்வாய்ந்த மத்திய சர்க்கார் என்ற பெயரால் தமிழகத்தின் பொருளாதாரம் முதலிய உரிமைகளுக்கு இடையூறு விளைந்திருப்பதால் விரைவில் இந்தப் பெருங் குறையைத் தீர்க்க வேண்டும் என்று அரசியல் நிர்ணய சபையைக் கேட்டுக்கொள்வதோடு உடனடியாகத் தமிழ் நாட்டினை பிரித்து அவ்வாறு திருத்தியமைக்க பாடுபடும்படி தமிழ் நாட்டு உறுப்பினரை வேண்டிக்கொள்கிறது அரசியலமைப்புத் திட்டத்தினை வரையறுக்கத் தமிழகத்திற்குச் சுய நிர்ணய உரிமை தருமாறும் கேட்டுக்கொள்கிறது.

தமிழாசிரியர் "துக்க வாரம்" கொண்டாடும் அளவுக்கு அவர்களை அலட்சியப்படுத்தும் சென்னை அரசாங்கத்தின் செயலை வன்மையாகக்கண்டிப்பதுடன் உடனடியாகத் தமிழாசிரியர்களின் ஊதியத்தினை உயர்த்தி அமைக்கவேண்டுமென்றும், அவ்வாறு உயர்த்தும்போது இப்போது கல்வி நிலையங்களில் வேலை பார்த்துவரும் தமிழாசிரியர்களுக்குள்ளே வேண்டாத தகுதி வேறுபாடுகள் காட்டி அவர்களைப் பிரிக்காது அங்கங்கே வேலைபார்க்கும் ஏனைய ஆசிரியர்களுக்குச் சமமான ஊதிய திட்டதை வகுத்து அளிக்க வேண்டுமென்றும் இம்மாநாடு சர்க்காரை வற்புறுத்துகிறது.

பிரஞ்சு தமிழ் மக்கள் தமிழகத்தோடு சேரவேண்டும் எனச் செய்துவரும் முயற்சியின் இம்மகாநாடு மனப்பூர்வமாக ஆதரிப்பதுடன் இந்திய சர்க்கார் உடனடியாகத் தலையிட்டு அந்த பிரதேசங்களில் பிரஞ்சு ஆதிக்கத்தினை வெளியேற்ற வேண்டும் என இந்த மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

சித்தூர் ஜில்லாவில் தஸ்தாவேஜ் பதிவு செய்வது முதலியவற்றைத் தெலுங்கிலேயே செய்யவேண்டும் என அதிகாரிகள் முதலியோர் செய்துவரும் முயற்சியை இந்த மகாநாடு கண்டிப்பதோடு சென்னை சர்க்கார் இதனைத் தடுக்குமாறு கேட்டுக்கொள்கிறது.

தமிழ்நாட்டில் தொடக்கப் பள்ளி முதல் கல்லூரி முடிய தமிழை முதல் மொழியாக ஆக்கி அதனை வருகிற ஆண்டிலேயே செயலில் கொண்டுவர வேண்டுமென்றும், இரண்டாவது மொழியாக ஆங்கிலத்தை ஆக்க வேண்டுமென்றும் ஹிந்தி முதலிய பிற மொழிகளுக்குப் பாட திட்டத்தில் இடமளிப்

(4-ம் பக்கம் பார்க்க)

ஐக்கிய தேச சபையில் இலங்கை

சேருவதற்கு இந்தியா ஆதரவளிக்கும்

இலங்கை-இந்தியா உறவுபற்றி திரு வி. வி. கிரி

புதுடில்லி, நவ. 10

அடுத்த பிப்ரவரியில் இலங்கை டொமினியன் அந்தஸது பெற்றவுடனே அது ஐ. நா. சங்கத்தில அங்கம் வகிக்க இந்தியா ஆதரவு தருமென்று இலங்கையில் இந்தியாவின் பிரதிநிதியான ஸ்ரீ வி வி. கிரி குளோப் நிருபருக்களித்த பேட்டியில் கூறினார்.

அவர் மேலும் "இந்தியாவும் இலங்கையும் சமூகப் பொருளாதார சர்வ தேச விவகார கலை சம்பந்தமாக ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கின்றன. எனவே இரு தேசங்களுக்குமுளள எதிர்காலப் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ள மார்க்கமிருக்கிறது. எதிர்க் கக்ஷி சர்க்கார் கக்ஷி முதலியன இந்தியருக்கு இலங்கை தேச சுதந்திர உரிமை தர வேண்டுமென்பதை ஆதரிக்கின்றன என்று கூறினார்.

இலங்கைப் பிரதமரான ஸ்ரீ சேனநாயக்கா இந்தியா-இலங்கைப் பிரச்னைகளைபற்றி நேருவுடன் கலந்தாலோசிக்க அவர் டிசம்பர் மாதம் இந்தியாவிற்கு வருகிறார். யுத்த காலததில் இந்தியரின் பொளாதார நிலைமை விருத்தியடைந்துள்ளது சுதேசிகள ரப்பர் தொழிலபிவிருததியில ஈடுபடடிருந்தனர்.

ஸ்ரீ கிரி உள்நாட்டு நிலைமையைப்பற்றி விவரிக்கையில் தீவில் கலாச்சாரம் முன்னேற்றமடைந்து வருகிறதென்றும அவர் இலங்கை பூராவும் சுற்றுப் பிரயாணம் செய்து அநேக பொது மேடைகளிலும் ஸ்தாபனங்களிலும் பிரசங்கித்ததாகவும் எங்கும் அவருக்கு குதூகலமான உபசரிப்பளிக்கப்பட்டதென்றும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள அரசியல் பிரசுர மொழிபெயர்ப்பு:

வகுப்புவாத பாசிஸ்ட் ஆட்சி

ரோமாபுரியில் 18 எகிப்தியர்

ஆட்சேபித்து இத்தாலியர் ஆர்ப்பாட்டம்

ரோமாபுரி, நவ. 10

எகிப்தில் இருந்து ரோமாபுரிக்குள் வந்து சேர்ந்த 18பேர்கள் அங்கிகரிப்பதை எதிர்த்து ரோமாபுரியிலுள்ள ஒஸியா என்னும் துறைமுகத்தில் ஜனக் கூட்டம் ஒழுங்கின்றியிருந்ததால் போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டிருந்தன. கேற்றிரவு போலிஸார் ஸ்தலத்துக்குவந்து அவர்களைக் கலைத்தனர். இங்கு வந்திறங்கியவர்களில் 11 பேர்கள் இன்று பிரிட்டனுக்குச் செல்வார்கள் என்றும் மற்றவர்களும் விரைவில் அனுப்பப்படுவர் என்றும் கூறப்பட்டபின் கூட்டம் கலைந்தது.

(ராய்ட்டர்)

லண்டன் ஹோட்டல் தொழிலாளர் வேலை நிறுத்தம்

லண்டன், நவ. 9

"ஸவோய் ஹோட்டலில்" நடைபெற்றவரும் வேலைநிறுத்தம் தளர்ந்துவருவதாகக் கூறப்படுவது தவறானதென தொழிற்சங்கத் தலைவர் ஆர்தர் லுவிஸ் மறுத்துள்ளார்.

சில தொழிலாளர் தங்கள் சங்கத்தில் இருந்து விலகியமையே தளர்ச்சி அடைந்து வருவதாக முளைத்த கூற்றுக்குக் காரணமாகும்.

வேலை நிறுத்த சம்பந்தமாக தொழில் மந்திரி சபையின் விசாரணை நாளையே ஆரம்பிக்கும். (ராய்ட்டர்)

சிர

நேத்திராஞ்சனத் தைலமே

சகல வைத்தியர்களாலும் கைவிடப்பட்ட எம்மை புத்துயிர் கொடுத்து காப்பாற்றியது

சப்தத்வு வாலிப சங்க கௌரவ காரியதரிசி திரு. வி. கார்த்திகேசு செல்லுவதாவது:

'சென்ற சில காலங்களாக சிர ரோக உபாதையினால் கண்ணிலும் கடும் வலித்தம் ஏற்பட்டு பல வித வைத்தியங்கள் செய்தும் சுகம் காணாது கடைசித் தடவையாக திரு. எம். கே. ஜெகநாதன் கண் வைத்தியரினால் வெளிவரப் பெற்ற சிர நேத்திராஞ்சனத் தைலத்தை இரு கிழமை பாவித்தமட்டில் எமது சகல உபாதைகளும் நீங்கியதுடன் எனது கண்ணுக்கும் பூரண சுகத்தைப் பெற்றேன். இத் தைலத்தின் அபூர்வ குணத்திற்கும் திறமைக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இதன் நற்குணத்தை மற்றவர்களுக்கும் தெரியப்படுத்த விரும்புகிறேன்''. ஒப்பம்

திரு. வி. கார்த்திகேசு
கௌரவ காரியதரிசி,
புங்குடுதீவு.

சிர

நேத்திராஞ்சனத் தைலம்

கண் புகைச்சல், குத்து, கூச்சம், மாலைக்கண், சிவப்பு முதலிய கண் சம்பந்தமான சகல ரோகங்களையும், தும்மல், நீர்வடிதல் முதலிய பீனிச வகைகளையும், கபால இடி, தலைவலி, மயக்கம், இருமல், இளைப்பு, நரம்புத் தளிர்ச்சி, மூலச்சூடு ஆகிய ரோகங்களையும் நிவர்த்தி செய்து, குளிர்ச்சியையும், ஞாபக சக்தியையும் கொடுக்கும். அஸ்மா, காசம், நீரழிவுக்கும் ஓரளவு சுகங் கொடுக்கும். காலம் நீடித்த நோயாளர்கள் நேரிலும் கடிதமூலமும் விபரம் தெரிந்துகொள்ளலாம்.

விலாசம் ஆங்கிலத்தில் தெளிவாய் எழுதுக.

2 அவுன்ஸ் சீசா ரூ. 3 25
4 ,, ,, ரூ. 5-50

தயாரிப்பாளர்:-

எம். கே. ஜெகநாதன்,
யூனாசி கண் வைத்தியர்.
பெரியகடை, யாழ்ப்பாணம்.

நிறுவ சிங்கள மகாசபைத் திட்டம்

ஆசிரியர் நந்தசிரியின் எச்சரிக்கை

பிரபல எழுத்தாளரும் முற்போக்கு வாதியுமான திவான வத்தே நந்தசிரி என்பவர் எழுதிய "அடிமைத்தளைக்கு எதிராக" என்னும் சிங்களப் புத்தகச் இலிருந்து எடுக்கப்பட்ட தமிழாக்கம்: ஈழத்தமிழன்:-

1944-ம் வருடம் ஜூலை மாதம் 24-ம் தேதி அநுராதபுரத்தில் கூடிய சிங்கள மகா சபையின் வருடாந்த சம்மேளனத்தின் பின்வரும் மூன்று விஷயங்கள் ஆலோசனைக் கெடுக்கப்பட்டது.

(1) சிங்கள மகா சபையினால் அரசியல் சுதந்திரம் பெறுவது எப்படி?

(2) தேசீயக் காரியக் கமிட்டியினால் அரசியல் விவகாரங்களை தீர்மானிப்பதெப்படி?

(3) அரசியல் சீர்திருத்தம் சம்பந்தமான ஆலோசனைகள் என்ன?

சிங்கள மகா சபையின் திட்டங்களிலும் மேற்படி மூன்று விஷயங்களில் இன்றுவரைக்கும் மாற்றம் ஏற்படவில்லை. அவை எப்படியாயினும் இவற்றை ஒவ்வொன்றாக அலசிப் பார்ப்பது தேச முன்னேற்றத்தில் ஆர்வமுள்ளவர்களின் கடமையாகும்.

அவற்றில், சிங்கள மகா சபாவினால் அரசியல் சுதந்திரம் பெறுவது எப்படி? என்னும் விஷயத்தைப்பற்றி சிறிது அலசிப் பார்ப்போம். இலங்கையிலே வாசஞ்செய்கிற சிங்கள-தமிழ்-முஸ்லிம் ஆகிய சிறிய பெரிய வகுப்பினர் ஒன்றாக அணி வகுத்து நின்று போராடிப் பெறும் பொருளாதார-சமூக விடுதலை மாத்திரம் தான் இலங்கையின் விடுதலையாக அறிவுள்ள எல்லோரும் ஒப்புக் கொள்ளுவார்கள். இந்நாட்டில் சிங்களவருக்கு தமிழர் இல்லாமலும், தமிழருக்கு சிங்களவர் இல்லாமலும், அதே போன்று முஸ்லிமகளும் மற்றும் வகுப்பினரதும் பரஸபர நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் இன்றி பெறும் சுதந்திரம், நீடிக்கக் கூடிய உண்மையான சுதந்திரமாக மாட்டாதென்பதை யார்தான் மறுக்கக் கூடும்? அப்படித்தான் ஒரு சமயம் தனிப்பட்ட வகுப்பினர் சுதந்திரம் பெறுவார்களானால் அது முஸ்பாத்தியாய்விடும்.

ஜெர்மனியின் ஆரியர்கள் நிகோட்ட விரும்பிய ஆரிய சுதந்திரத்தையோ, ஜின்னாவின் "பாகிஸ்தான்" போன்ற அரசியல் சுதந்திரத்தையோ, மாண்டு மடிந்த இத்தாலியின் "பாஜிஸ்ட்" சுதந்திரத்தையோ கணணியமான வாழ்க்கையில் ஆர்வமுள்ள இத்தேசமக்கள் விரும்பவல்லை யென்பது இப்மொழுது நன்றாகத் தெரிகிறது. அதற்குப்பதிலாக, நிர்மலமானதும் சிரேஷ்டமானதும் மக்கள் வாழ்க்கையில் கண்ணியம் பொருந்தியதும், எல்லோரையும் சமமாக கௌரவிக்கக் கூடியதுமான உண்மையான மக்கள் சுதந்திரத்தையே விரும்புகிறார்கள் தேசமக்கள்.

மனிதனின் ஜன்ம உரிமையையும் அவனடைய வேண்டிய பொருளாதார உரிமையையும் அமுக்கி ஒதுக்கிவிட்டு, அவனை அநாதையாகவும் செயலற்றவனாகவும் உண்டாக்கும் சமுதாயத் திட்டத்தையே இன்னும் நம் நாட்டில் சீர்திருத்தமாக கருதுகிறார்கள் நமது அரசியல் தலைவர்கள் சிலர். இப்படி அடாத்தான மனோபாவத்தைக் கொண்ட செல்வம் - செலவாக்குள்ள தலைவர் வகுப்பு வாதத்தினால் சுதந்திரம் பெற நினைப்பது வியர்த்தமான முயற்சியாகும், வகுப்பு வெறிகொண்டு சுதந்திரம் அடைவோமானால் இது சிங்களவர்களான எங்களுக்கு மட்டும் உரிமையுடையதாய் இருக்க வேண்டும். அப்படிதான் சிங்களவர்களுக்கு இருந்திட்டபோதிலும், ஒருசில குடும்பங்களுக்கு சுதந்திரமாய் இருக்குமானால், அதுதேசத்திற்கு பொதுவான சுதந்திரமாய் இருக்க முடியுமா?

சிங்களவர்களான நாம், எங்களுக்கு மட்டும் தேவையானபடி வகுப்பு வெறிகொண்டு ஜாதியின் பேரால் சுதந்திரம் பெறப்போய் (பலதரப்பட்ட மக்கள் வாழும் இலங்கையில்) நாங்களே எங்கள் அழிவிற்கு ஹேதுவான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளக் கூடாது ஒரு சில குடும்பங்களின் சுகபோக வாழ்வுக்கு மட்டும் பொது லட்சியத்தை துஷ்பிரயோகம் செய்யாமல், தேச மக்களின் பொது உரிமையையும் கௌரவத்தையும் நல்லெண்ணத்தையும் லட்சியமாக்கக் கொண்டு பிரபலமான-உதாரமான-நடவடிக்கைகளை கையாள வேண்டுமென்பதை நாம் கண்டிப்பாக அறிந்துகொள்ள வேண்டும். இதைப்பற்றி சிங்களவர் புதுசாலித்தனமாய் நடந்துகொள்ளப் பார்க்க வேண்டும்.

தேசீய காரியக் கமிட்டியினால் அரசியல் விவகாரங்களை தீர்த்துக் கொள்ளுவதற்கு வகுப்புவாதி திரு. பண்டாரநாயகக்கா நினைக்கிறார். ஆனால் அந்த எண்ணமானது புகைரத பாதையில் புகைரத மட்டுமின்றி பஸ்-லொறி-கார் மாட்டுவண்டி முதலிய வாகனங்களும் செலுத்துவதற்கு செய்யும் பிரயத்தனமேயென்று திரு. பண்டாரநாயக்காவுக்கு தெரியாததுஆச்சரியமாகும். தேசீயக் காரியக் கமிட்டியை உண்டாக்கியதும் வகுப்பு வெறி கொண்ட சிங்களவர்கள் நூற்றுக்கு நூறு தம் ஜாதியின் பேரால் அரசியல் அதிகாரம் சகலத்தையும் தங்களுக்கே வைத்துக் கொள்ள முயற்சி செய்வார்கள். அதைப் போன்று தமிழர்களும் மற்றவர்களும் தம் ஜாதியின் பேரால் அரசியல் ஆதிக்கம் பெற போராடுவார்கள் என்பது நிச்சயம். இந்நிலையினால் பலதரப்பட்ட வகுப்பு மக்களுடைய இத்தேச மக்களின் தேசீய ஒற்றுமைக்கு பங்கமுண்டாவதோடு பிரித்தாளும் ஏகாதிபத்தியவாதிகளுக்கு தம் சுரண்டல் வேலையைச் செய்வதற்கு கிட்டாத சந்தர்ப்பம் உண்டாகிறது.

பொது லட்சியத்திற்கு அப்பாற்பட்ட வகுப்பு வாதத்தினால் தேசத்தின் பொதுவான அரசியல் விவகாரங்களை தீர்ப்பதெப்படி?

'சிங்களவர்களின் ஒற்றுமையும் அபிவிருத்தியும் மட்டுமல்ல, எல்லா வகுப்பு மக்களினதும் பரஸ்பர ஒற்றுமையை உண்டுபண்ணுவதற்குள்ள ஒரே பிரபலமான வழியும் முயற்சியும், எங்கள் சிங்கள மகா சபைதான் என்று எனக்குத் தெரிகிறது' 'என்று ஒரு முறை திரு. பண்டாரநாயக்கா கூறினார். என்ன நம்பிக்கையின் மீது-என்ன அனுபவத்தின் மீது என்ன காரணத்தைக்கொண்டு மேற்படி வழியைக் கண்டு பிடித்தார், திரு. பண்டாரநாயக்கா?

(தொடரும்)

இந்திய சர்க்காரின் மலேயா பிரதிநிதி

சென்னை வந்துள்ளார்

சென்னை, நவ 9

மலேயாவில் இந்திய சர்க்கார் பிரதிநிதியான ஸ்ரீ தீவ் டில்லியில் பண்டித நேருவை சந்தித்துவிட்டு இன்று சென்னை வந்து சேர்ந்தார்.

நவ. 17-ம் தேதி வரை அவர் இங்கு இருப்பார் மலேயாவில் நலன்களையுடைய பல வேறு ஸ்தாபனங்களுடன் முக்கியமாக நாட்டுக்கோட்டை செட்டியார்கள் சங்கத்துடன் அவர் விவாதிப்பார்.

கமியூனிஸடுகளின் கடுமையான தாக்குதல்

முக்டானில் ஆபத்து நீங்கியது

ரயில் பாதை பாலங்கள் நாசம்

ஷாங்கை, நவ. 10

கமியூனிஸட் துருப்புகளுக்கும் சீன அரசாங்கத்திற்குப் நடந்துவரும் உள்நாட்டுப் போர் மகா உக்கிரத்தை அடைந்துவருகிறது. கமியூனிஸட் படைகள் ஹோப்பி ரயில்வே சந்தி நகரான சீசியவாங்-வடமேற்கு வாயிலூடாக உள்ளே புகுந்துவிட்டன. இதனால் அரசாங்கத் தலைவர் ஷியாங்கைஷேக் எல்லா ஆகாய தரைப்படைச் சாரதிகளையும் ஒன்று திரட்டி கமியூனிஸ்டுகளை நசுக்கி இந்த முக்கியமான ரயில்வேச் சந்தியை எப்படியும் காத்தாக வேண்டும் என்று தம் தளகர்த்தருக்குச் செய்தியனுப்பியுள்ளார். இதைத் தொடர்ந்து 150 ஆகாய விமானங்கள் போரில் ஈடுபட்டுள்ளன இவ்வளவு விமானங்கள் ஏகோபித்து எப்போதும் சீனாவில் போரில் பாய்ந்தது கிடையாது தெருச் சண்டை அதிக கடுமையாக நடைபெறுகிறது.

முக்டானில் கமியூனிஸட் தோல்வி

20,000 கமியூனிஸட் துருப்புகளை அரசாங்கத் துருப்புகள் வளைந்துகொண்டு விட்டதாகவும் அவர்களில் 7000 வரை காயப்பட்டோ, இறந்தோ போய்விட்டதாகவும் சில செய்திகள் தெரிவிக்கின்றன. பல நூற்றுக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டதோடு, ஏராளம் தளவாடங்களும் கைப்பற்றப்பட்டன. இதனால் மஞ்சூரியாவின் இருதயத்திற்கு மிகவிருந்த ஆபத்து நீங்கிவிட்டதாக முக்டானில் உள்ள அரசாங்க அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். பொதுவாக தோல்விக்கு மேல் தோல்விபெற்றுவந்த அரசாங்க துருப்புகளுக்கு இது குறிப்பிடத் தக்க வெற்றியாகும்.

இதர இடங்கள்

ஆனால் மற்ற இடங்களில் ஆபத்து அதிகமாகவே இன்னும் இருக்கிறது. மேற்கு ஹோப்பி ரயில்வேச் சந்தியில் விமான நிலையத்தைக் கமியூனிஸடுகள் கைப்பற்றி விட்டார்கள். இதனால் ஆபத்து மேலும் அதிகரித்துவிட்டது.

கமியூனிஸ்ட் பீரங்கிப் படைகளின் ஓயாத குண்டு மாரிகளிடையில் ஒரு புதிய விமான நிலையம் நிறுவ முயற்சிக்கப் படுகிறது.

இதேபோன்ற மோசமான நிலைமை சென்ற 15 நாட்களாக கமியூனிஸடுகளால் சூழப்பட்டயூன்ன் நகரத்திலும் இருக்கிறது. இங்கு ஒரு தானிய மணிகூட மிச்சமில்லை என்று ஒரு சீனச் செய்திகூறுகிறது. கமியூனிஸடுகள் ரயில் பாதையைச் சின்னாப் பின்னப் படுத்துப் யுத்த முறையை அனுஷ்டிக்கின்றனர். பல ரயில் பாலங்கள் இரவிரவாகத் தகர்த்தெறியப் பட்டுவிட்டன. (ராய்ட்டர்)

யூனியன் கொடியை அகற்றிய விஷமிகள்

ஒருவனுக்குத் தண்டனை சிறுவனுக்கு எச்சரிக்கை

திருச்சி, நவ. 6

திருச்சி ஸடேஷனரி ச. மாஜிஸடிரேட் ஸ்ரீ ஸடீபென்ஸ நேற்று ஜகன்னாதன் என்பவனுக்கு இரண்டுமாத கடுங்காவல் தண்டனை விதித்தார். 15 வயதுள்ள மாரியப்பன் என்பவனை எச்சரிக்கை செய்து விடுதலை செய்தார்.

அவர்கள் இருவரும் திராவிட கழகத்தைச் சேர்ந்தவர்கள் சென்ற ஆகஸடு 17-ம் தேதி பாலக்கரையில் ஒரு தெருவில் இருந்த ஒரு இந்திய யூனியன் கொடியை அகற்றி அதை ஒளித்து வைத்ததாக அவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எகிப்திய காலரா நிலைமை

20,000 பேர் நோய் கண்டனர்

10,000 பேர் மரணம்

கெய்ரோ, நவ. 10

எகிப்தில் காலரா நோய்க்குப் பலியானவர் எண்ணிக்கை பத்தாயிரம் எல்லையைக் கடந்துவிட்டது. கடந்த 48 மணி நேரத்தில் இறந்த மொத்தம் 292 பேருடன் இறந்தவர்களின் மொத்தத் தொகை பத்தாயிரத்து இருநூற்று நாற்பத்தேழாகியுள்ளது.

கடந்த 48 மணி நேரத்தில் புதிதாக நோய்கண்டவர்களின் தொகை 505 ஆகும். இதுவரை நோய்கண்டவர்களின் எண்ணிக்கை 20 ஆயிரத்திற்கதிகமாகும்.

நோய் பரவ ஆரம்பித்து இப்போது ஏழு வாரங்களாகின்றன. (ராய்ட்டர்)

பாரசீகத்தில் பிளேக் நோய்

டெஹ்ரான், நவ. 10

மேற்குப் பாரசீகத்தில் பிளேக் நோய் பரவ ஆரம்பிக்கிறது. மொத்தம் 40 மரணங்கள் இதுவரை இதனால் நிகழ்ந்துள்ளன.

இது தவிர ஈராக் எல்லைக்கு 500 மைல் தெற்காக பாரசீகக் குடாக் கடலில் டுபேயிலும் காலரா நோய் தோன்றியுள்ளதாகத் தெரிகிறது. (ராய்ட்டர்)

லொசிஞ்சர், டொபி, ஐசிங் சுகர்
இம்மூன்றிலும் முதல்தரமானது வேண்டுமென்றால்
குயின் (ராணி) மார்க்கே
பார்த்து வாங்குங்கள்



குயின் (ராணி) கன்பெக்ஷன் கம்பெனி
297 & 307 சீ ஸ்டிரீட் (செட்டியார் தெரு)
கொழும்பு
Phone: 4511 Telegrams:- "CONFECTION"

'சுதந்திரனி'ன்றேல் சுபீட்சமில்லை

பிடிச் சக்கரவர்த்தி.

த.பி.
சொக்கலால்
ராம்சேட் பீடி
2 பீடிரிங்லேபில்

அற்புதமானது! ஆனந்தமளிப்பது!!

மனதிற்கு பரவசமும் உல்லாசமும் ஊட்டுவது
இப்படியாக பாலர் முதல் பெரியோர்வரை ஏகோபித்து புகழ்வதெல்லாம்

மேனகா மார்க் லொசிஞ்சர்களே!

மேனகா மார்க் லசிஞ்சர்கள் ஒவ்வொன்றிலும் தேகத்திற்கு வலிமை அளிக்க வல்லதும், இரத்த விருத்தியுண்டாக்குவதுமான குளுக்கோஸ் எனும் சத்து சேர்ந்திருக்கிறது. அத்துடன் மனதிற்கு நல்மணமும், நற்சுவையும் கொடுக்கக்கூடிய பழரசச் சத்தும் சேர்ந்து இதற்கென்றே இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நிபுணர்களைக்கொண்டு சாஸ்திரமுறைப்படி தயாரித்து யாவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய விதத்தில் சரசமான விலையில் டின்களில் அடைத்து விற்கப்படுகின்றது.

மேனகா மார்க் லொசிஞ்சர்

எல்லா முக்கியவியாபாரிகளிடமும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

ராஜா இன்டஸ்ரியல் வேர்க்ஸ்,
71, புதிய சோனகத் தெரு, கொழும்பு.
Telegram: "SWEETS" Telephone: 2737

கீழ்க்காணும் வியாபாரிகளை நமது முக்கிய விநியோகஸதர்களாக நியமித்திருக்கிறோம்.

V. T. செல்லையா அன் கோ, குருநாகல்
K. முருகேசு அன் கோ, " "
மனோன்மணி ஸ்டோர், கேகாலை Kegalle.
W. E. M. பாஷா சாகிப் அன் கோ, நாவலப்பிட்டி
N. B. அந்திரிஸ சில்வா அன் கோ, கம்பளை
M. சேகு அலி ராவுததர் அன் கோ, வத்துகாமம்
A. S. M. முகைதீன் அன் கோ, மாத்தளை
M. T. செல்லையா அன் கோ, கெக்கிராவ
K. சிவகுநாதப்பிள்ளை அன் சன்ஸ், யட்டியாந்தோட்டை
S. நாகமுத்து, ருவான்வெளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ள வர்த்தகமும் கைலஞ்சமும்

திடீர்பணக்காரரானவர்களை கண்டுபிடிக்க விசாரணைக் கமிஷன்

யாழ்ப்பாணத்தில் திரு. பீட்டர் கெனமன் பேச்சு

(நமது யாழ்ப்பாண நிருபர்)

யாழ்ப்பாணம், நவ. 11

கட்டுப்பாட்டிலாகாக் களிபொறுப்பான உத்தியோகவகித்தவர்கள், அவசிய உணவுப் பொருள் விநியோகம்முலிய வற்றில் சம்பந்தப் பட்டவர்கள்—ஆகியோரின் சொத்துக்கள் பற்றி தீர விசாரிக்க ஓர் விசாரணைச் சபை நிறுவ வேண்டும் என்று பாராளுமன்றத்தில தாம் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர விருப்பதாக இலங்கை கமியூனிஸ்ட் கட்சி காரியதரிசியும் பாராளுமன்ற அங்கத்தினருமான திரு பீட்டர் கெனமன் யாழ் பாணம் நகரமண்டபத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேற்படி கூட்டம் சோவியத் ரஷியாவில் 1917-ல் நிகழ்ந்த புரட்சியின் ஞாபகவிழாக் கொண்டாட்ட சம்பந்தமாகக் கூட்டப்பட்டது ஸ்கந்தவரோதயக் கல்லூரிக தலைமை யாசிரியர் திரு. சுப்ரமண்யம் கூட்டத்தில தலைமை வகித்தார்.

ஒரு தேசிய அரசாங்கத்தை நிறுவ வேண்டும் என்று கமியூனிஸ்ட் கட்சி இலங்கை பூராவும் நடத்திவரும் பொது ஜனக் கிளர்ச்சி சம்பந்தமாக கட்சியின் யாழ்ப்பாணக் கிளை 15 கூட்டங்களை நடத்த விருக்கிறது அதின் ஆரம்பக்கூட்டமே இது.

தலைவர், திரு கெனமனை யாழ்ப்பாணத்தின் சார்பில வரவேற்றுப் பேசிவிட்டு சோவியத் புரட்சியைப் பற்றி சில வார்த்தைகள் பேசினார். கமியூனிஸ்ட கட்சி ஓர் பொதுஜன ஐக்கிய முனனணியை நிறுவ முயற்சிப்பதைக் தாம் வரவேறபதாகவும் யாழ்ப்பாண மக்கள் அதற்கு எல்லா ஆதரவும் தர வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

அதன்பின் திரு கெனமன் பேசியதன் சுருக்கம் பின்வருமாறு:-

இப்போதுள்ள பிற்போக்கு அரசாங்கத்தை கவிழ்த்து அதற்குப் பதிலாக ஒரு பரந்ததேசிய அரசாங்கததை நிறுவவேண்டும் அத்தகைய அரசாங்கம் சுதந்திரம், ஜனநாயகம், சமூக முன்னேற்றம ஆகியவற்றிற்குப் பாடுபடவேண்டும் இப்போது உள்ள அரசாங்கம் இடமானதல்ல. ஆனால் தனனைப் பலப்படுத்த அது இடைவிடாது முயற்சிக்கிறது மந்திரி சபை சில நபர்களைப்பொறுக்கி எடுத்து நிர்வாகத்தின் முக்கிய பதவிகளில் அமர்த்தி விட்டு அதன் பினபே அரசாங்க சேவைக் கமிஷனை நிறுவி இருக்கிறது. உண்மையில் கமிஷன் முதலில் நிறுவப்படடு பின்னர் கமிஷனல் உதவியோக நியமனங்கள நடப்பதே முறை

தோல்வியடைந்த யூ என். பி அபேட்சகர்கள் வெளியூர்களுக்கு அரசாங்கப் பிரதிநிதிகளாக அனுப்பி வைக்கப்படுகினறனர். ஒரு காலத்தில் "கப்பற் படையில் சேர்ந்து உலகததைப் பார்" என்று கூறுவது வழக்கம். இன்றோ "யூ என். பி யில் சேர்ந்து பொதுஜனச் செலவில் உலகத்தைப் பார்" என்று சொல்வதே பொருத்தம்.

கட்டுப்பாட்டதிகார உத்தியோகங்கள் அவசிய உணவுப் பொருள் விநியோகததில சம்பந்தப்பட்டவர்கள்—ஆகியோரது செல்வததைப் பற்றி விசாரிக்க ஓர் விசாரணைச் சபை வேண்டுமென்று நான் ஒரு தீர்மானததைப் பாராளுமன்றதில் கொண்டு வர இருக்கிறேன் லஞ்சப் பேயை அறவே எமது பொது வாழ்விலிருந்து விரடடினாலொழிய நமமால ஒரு

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடட்டிற்காக 1947-ம் ஞு நவம்பர் மீ 12உ இந்த பத்திரிகை 144A நட்டாரத் தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிடப்பட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டம்

மகாத்மா காந்தி பேசுவார்

இரகசிய நடவடிக்கைகள் நிருபர்களுக்கு அனுமதியில்லை

புதுடில்லி நவ. 6

அகில இந்திய காங்கிரஸ கமிடியின் அடுத்த கூட்டம் டில்லியில் நவம்பர் 15-ம் தேதி நடைபெறும்.

மகாத்மா காந்தி இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுவார் என்று யு. பி. செய்தி கூறுகிறது

அகில இந்திய காங்கிரஸ கமிடியின் நடவடிக்கைகள் எல்லாம் இரகசியமாகவே நடக்கும். பததிரிகை நிருபர்கள் அனுமதிக்கப்படமாடடார்கள் என்று அ இ கா. க. காரியதரிசி அறிவிக்கிறார்.

காங்கிரஸ காரியக் கமிட்டியின் தீர்மானங்கள் எல்லாம் பெரும்பான்மை பிறகு நேரம் இருந்தால் தனிப்பட்ட அங்கததனர்களின் தீர்மானங்கள் விவாதிக்கப்படும் இதுவரை சுமார் 20 தீர்மானங்களை அங்கததினர்கள் அனுப்பியிருக்கிறார்கள்.

தேசததின் அரசியல் நிலைமை மாறிவிட்டதால் காங்கிரஸின் அமைப்பு, அதன் வேலைத் திடடம் ஆகியவைபற்றியதீர்மானங்கள்தான் முதன்மையான ஸதானம் பெறும்.

சோஷியலிச கொள்கைகளை பொடடி காங்கிரஸ வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்படும் இடதுசாரிக் கட்சியின்களர்ச்சி இதனால் அடங்குமா சோஷியலிஸடுகள் காங்கிரசுக்குள் இருந்து வேலை செய்ய சம்மதிப்பார்களா என்று கேட்கப்படுவார்கள்.

காங்கிரஸமகாசபையின் கூடடத்தை எப்பொழுது கூடடுவது என்பது மற்றொரு முக்கிய பிரச்னையாகும். இந்த வருஷமே அது கூடடப்பட வேண்டுமென்ற அபிப்பிராயம் வலுத்திருக்கிறது.

வீதிகளில் சிரிந்து வியாபாரம் செய்பவர்கள்

தடுக்கும் தீர்மானம் முனிசிபல் சபையில தோல்வியுற்றது

கொழும்பு, நவ 11

கொழும்பு முனிஸிபல் சபையின கூடடம் மேயர் திரு. ஆர். எப். டி மெல் தலைமையில நடைபெற்றது. தெருக்களில சாமான்கள் கொண்டுதிரிந்து விற்கும் வியாபாரிகள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுபதை நிறுததவேண்டுமென்று கடந்த செபடம்பரில் முனிஸிபல் சபை ஒரு தீர்மானம் கொண்டுவந்திருந்தது இததீர்மானத்தை ரத்துச்செய்யவேண்டுமென்றும வீதிகளில் திரிந்து பொருட்களை விற்பனை செய்வோரை அனுமதிக்கப்படாது என்றும் திரு. டபிள்யூ ஏ. டி ரத்னுடக்கா ஒரு தீர்மானம் கொண்டுவந்திருந்தார். இததீர்மானம் சபையில் எடுக்கப்பட்ட போது பலத்த விவாதம் சபையில் நடைபெற்றது. வீதிகளில் திரிந்து பொருட்கள் விற்பனை செய்பவர்களைத் தடுக்கப்படாதென்று பல அங்கததனர் கூறினர். முடிவில் தீர்மானம் வாக்கெடுக்கவிடப்பட்டபோது 13 பேர் பாதகமாகவும் 7 பேர் சாதகமாகவும் வாக்களித்தனர். நான்கு பேர் வாக்களிக்கவில்லை. திருரத்னாயக்காவின் தீர்மானம் தோல்வியுற்றது.

விதநாகரீக சமுதாயத்தையும நிர்மாணிக்க முடியாது.

யாழ்ப்பாண மக்கள் முன்னுள்ள பிரச்னை சிங்கள மகளுடன் ஒத்துழைப்பதா வேண்டாமா எனபதல்ல ஒததுழைக்க வேண்டுமெனபதை எல்லோரும் ஒத்துக் கொள்கிறார்கள். ஒததுழைப்பு யாரோடு எதற்காக எனபதே பிரச்னை.

சுதந்திரம், ஜனநாயகம் சமூக முன்னேற்றம் ஆகியவறறிற்காகப் போராடி இககொள்கையை நிலைநாட்டவல்ல. ஒரு அமசாங்கததை நிறுவுவதற்கு உழைப்பவர்களோடு தமிழ் மகா ஜனங்கள் நிச்சயம் ஒததுழைக்க வேண்டும்.

பரமேஸவரக் கல்லூரி உதவித தலைமை ஆசிரியர் எஸ சிவபாத சுந்தரம் ஆர். ஆர். பாலசிங்கம் ஆகியோரும் பேசினர்.

சிதறுண்ட தமிழர்களே! சேரவாரீர்!

(2-ம் பக்கத் தொடர்)

பதோ அம்மொழிகளுக்காக அரசாங்கத்தின் பொருளையும் காலத்தையும் செலவிடுவதோடாது என்றும் இம்மகாநாடு அரசாங்கத்தாநக்கு அழுத்தமாகத் தெரிவிததுக் கொள்கிறது.

சென்னை மாகாணத்திலேயே பிறமொழி வழங்கும் இடங்களில பெருவாரியாக வாழுகின்ற தமிழர்களதுகலை-மொழி முதலியன மறைந்தொழியாதபடி வளர்த்துக் கொள்வதற்கு வேண்டிய உதவிகளைச் செய்து தருமாறு சென்னை சர்ககாரை இம்மகாநாடு கேட்டுக் கொள்கிறது. மற்றும் இமமாகாணத்திற்கு வெளியே இந்தியாவன பிற பகுதிகளிலும் இலங்கை மலேயா போன்ற அயல் நாடுகளிலும் சேர்ந்தாற்போல் ஒரே இடததில் வாழும் தமிழர்களது நலன்களை அங்குள்ள அரசாங்கங்கள் புறக்கணிக்காது பாதுகாப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளுமாறு இம்மகாநாடு வேண்டுகிறது.

தமிழ் நாட்டின் தெற்கு வடக்கு எல்லைகளை மீட்கவும் தலைநகராம் சென்னையை ஆந்திரர் அபகரிக்காது காக்கவும் தமிழகததில் உள்ள எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும் கலந்து பேசி எல்லாக் கட்சியினருக்கும் பிரதிநிதித்துவமுடைய எல்லைப் பாதுகாபுக் குழு ஒன்றை அமைததுமக்களிடை பிரசாரம் செய்யவும் அரசாங்கததாரால் நியமிக்கப்பட இருக்கும் எல்லை நிர்ணயக் குழுவின் முன்னைச் சமர்ப்பிபதற்கான சான்றுகளைத் தயாரிக்கவும் இம்மகாநாடு சமூகச் செயற் குழுவினருக்கு அதிகாரம் அளிக்கிறது.

எதிர்காலத்தில் உருவாகும் ஒன்றுபட்ட ஒப்புடமை சுதந்திர தமிழ் குடியரசில் புதுக்கோட்டைத் தமிழ் அரசு இணைந்து கொள்ளும் என்ற உறுதிமொழியினை புதுக்கோட்டை மன்னர் உடனடியாக தமது அறிக்கை மூலம் வெளியிடவேண்டும் என்று இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது உதாரணமாக ஐக்கிய கேரளத்தில் கொச்சி சமஸ்தானமும் சேர்ந்துகொள்ளுமென்று கொச்சி மன்னரடுத்த அறிக்கையை இமமாநாடு சுட்டிக் காட்டுகிறது

புதுக்கோட்டை தனியரசிற்கு தற்போதமக்கள் விரும்பும்பெறுப்பாட்சியை உடனடியாக ஏற்படுத்த வேண்டுமென்று மன்னரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது. மன்னர் வழக்கத்தவறினால் மேற்படி பொறுப்பாட்சிப் போராட்டத்தில் தமிழ் சுக் சமூகமும் முழு மூச்சுடன் பெறும் என்பதை இம்மாநாடு தெரிவித்துக் கொள்கிறது.

சென்னை சர்க்காரால் போடப்பட்டிருக்கும் பாதுகாப்புச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென்று மகாநாடு கோருகின்றது.

ஜமீன் இனாம் மசோதாவை இந்த மகாநாடு வரவேற்பதோடு ஜமீன் இனாம் இவற்றை நஷ்ட ஈடு கொடாமலே உடனடியாக ஒழிக்க வேண்டுமென்று சென்னை அரசியலாரை இந்த மகாநாடு வேண்டிக்கொள்கிறது.

தமிழ் நாட்டு பள்ளிகளில் ஹிந்தி போன்ற பிறமொழிகள்

களனித் தொகுதி தேர்தல்

ஆட்சேப மனு விசாரணை

கொழும்பு, நவ. 11

களனி தொகுதி அங்கத்தவர் தேர்தலை ஆட்சேபித்து ஒரு தேர்தல் ஆட்சேபனை மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கது. இந்த ஆட்சேப மனுவைத் தாக்கல் செய்த களனி பா தொகுதி வாக்காளரில் ஒருவரான திரு. கே. ஏ. பெரேரா தமது மனுவில் அததொகுதி அங்கத்தவர் திரு. ஜே ஆர் ஜெயவர்தனவின் தேர்தல் போது அவரும் அவரது ஏஜண்டுகளும் மற்றவர்களும் செய்ததென்று பல குற்றச்சாட்டுகளை குறிப்பிட்டுள்ளார். இவற்றுக்காக மனுதாரி கோர்ட்டில் ரூ. 5000 ஜாமீன் பணம் கட்டியுள்ளார்.

எதிராளியான களனிதொகுதி அங்கத்தவர் மனுதாரி தம்மீது கொண்டுவந்துள்ள குற்றச்சாட்டுகள் மூன்றுக்கு மேற்பட்டவைகள் என்றும் அதற்கு ரூ 5000 ஜாமீன் போதியதல்லவென்றும பாராளுமன்ற தேர்தல் சட்டங்களினபடி இந்த ஜாமீன் தொகை குறைவாக இருபதாகவும் ஆட்சேபனை தெரிவித்து இதனைக்கொண்டு வழக்கை நீக்கவிட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

எதிராளியின் இந்த ஆட்சேபனை சம்பந்தமாக நேற்று நீதிபதி திரு பஸநாயகா முன் ஆரம்ப விசாரணை நடைபெற்றது

எதிராளி தரப்பில் பேசிய வழக்கறிஞர் திரு எச் வி. பெரேரா, மனுதாரியின் மனுவிலே எதிராளிமீது மூன்று குற்றங்களுக்கு மேல் சுமத்தப்படடுள்ளதாகவும் பாராளுமன்றச் சடடப்படி இக்குற்றங்களுக்கு கட்டப்பட்ட ஜாமீன் பணம் போதியதல்லவென்றும் இதனால் மனுவை நிராகரித்துவிட வேண்டுமென்றும் கூறினார்

மனுதாரிதரப்பு வழக்கறிஞர் திரு ஈ. ஜி. விக்கரமநாயகா பதிலளிக்கையில், எதிராளி தரப்பு வழக்கறிஞர் கொண்டு வந்துள்ள ஆட்சேபனையை அங்கீகரிப்பின் தேர்தல் ஆட்சேப மனுக்களைத் தாக்கல் செய்பவர்கள் லட்சாதி பிரடக்களாகவே இருக்கவேண்டுமென்றும் மற்றவர்களால் இவ்வளவும் ஜாமீன கட்ட முடியாது விடும என்றும், தேர்தல் ஆட்சேப மனுக்களை ஏற்று தேர்தலில் களங்கமின்றியிருக்கச் செயவது முக்கியமென்றும ஒரு முறை தாக்கல் செய்யப்பட்ட மனு திரும்ப வாபஸ்பெற முடியாதென்றும், தேர்தல் பனு பொது விஷயமாக இருபதால் இததகைய மனுக்களைத் தாக்கல் செய்பவர்களை ஆவலத் தடுப்பது சட்டத்தின் நோக்கமென தாம் நினைக்கவில்லையென்றும் விபரமாக கூறினர்.

திரு. பெரேரா, தமது கட்சி மீது கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுகள் பலவென்று கூறியிருந்தார். இவற்றை மனுவுக்கு வைக்கையில் மனுதாரியின் வழக்கறிஞர், அச்சிடுவது பிரசுரிப்பது முதலியன "ஒரே தொடர்பான" விஷயங்களென்றும் அவை ஒரே குற்றச்சாட்டுத்தானென்றும் கூறினர்.

இரு கட்சி வழக்கறிஞர்களும் பல விஷயங்களையும் ஒன்று எடுத்து விளக்கியதுடன் அவற்றின் முக்கியத்துவங்களையும் வற்புறுததிக் கூறினர் நீதிபதி இவ்விஷயம்பற்றி சகல நீதிபதிகளுமடங்கிய சபையில் மீண்டும் இவ்விஷயத்தை எடுத்துக்கொள்வதாக கூறி ஒத்தி வைத்தார்.

ஆதிக்கம் பெறச் செய்வதை இம்மகாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

சென்னை ஜார்ஜ் டவுனை சிதம்பரம் நகர் எனப பெயரிடுமாறு அரசியலாரைக் கேட்டுக் கொள்கிறது.

திருவிதாங்கூர் தமிழகம் விடுதலையடைவதற்காகப் போராடும் திருவிதாங்கூர் தமிழர்களையும் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசையும் இம்மாநாடு பாராட்டுவதுடன் திருவிதாங்கூர் தமிழ் மாகாண அமைப்புக்கு வேண்டிய உழைப்பு, பொருள முதலிய உதவிகளை அளிக்குமாறு தமிழ் மக்களை இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

கிங்ஸ்லியில்

தனசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும்
சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

கண்ணுக்கினிய ஜோடினைகள்!
அபூர்வ நடனங்கள், பாடல்கள் நிறைந்தது

விடுதலைக்குப்பின் கிருஷ்ணன்தோன்றும்
மகத்தான 2வது படம்

கன்னிகா

உங்கள் உள்ளங் கவர்ந்த நடிகர்களான
என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ மதுரம், டி. ஈ வரதன், எம். எஸ் சரோஜினி,
எம். ஆர் சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் திறம்பட நடித்தது



அழகிய கலண்டர்

1948-ம் வருடத்து மங்களகரமான

மெய்கண்டான் திருக்குறட் கலண்டர்

அறிவைப் பெருக்கும் அரிய பல விஷயங்களுள்ளது. திருக்குறள்: ஒரு தேதியில் செய்யுள், அடுத்த தேதியில் அதன் உரை [முறையே வரிசையாக] உள்ளது.

10 x 15 அழகிய படத்துடன் விலை ரூ. 1-75

முதுமொழிக் கலண்டர்:
7 x 11 படத்துடன் ரூ. 0-85
நிர். 1 டயறி ரூ. 1-50
நிர். 2 டயறி ரூ. 0-85

பிந்தினால் கிடைப்பதரிது

மெய்கண்டான்

அச்சியந்திரசாலை,
மாட்டுவில் சாவகச்சேரி P. O.

கொட்டாஞ்சேனை கொலை வழக்கு

எதிரியை மூவர் இனங் கண்டு பிடித்தனர்

கொழும்பு, நவ. 11

கொட்டாஞ்சேனை காலேஜ் வீதியில் திரு. ஜி. டி. டி. சில்வா செனிவிரத்ன என்பவர் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக நுகய கொடையைச் சேர்ந்த கே. ஏ. தர்மதாஸா என்பவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. நேற்று கொழும்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில விசாரணை நடைபெற்றபோது கொலைசெய்யப்பட்ட திரு. செனிவிரத்ன வீட்டில் எதிரியைத் தாம் கண்டதாக மிஸ் மோரின் ஜோக்கிம், திரு. மோரின் ஜோக்கிம், காலிட் ஆகிய மூவரும சாட்சியமளிக்கையில் தெரிவித்தனர். கோர்ட்டில ஆடை பெற்ற ஆள் இனங் கண்டு பிடிக்கும் அணிவகுப்பின் போது மூன்று சாட்சிகளும் எதிரியை அடையாளங் கண்டுபிடித்தனர் இந்த அணிவகுப்பில் பதினொரு பேர்கள் நிறுத்தி வைக்கப்படடிருந்தனர். இவ் வழக்கு சம்பந்தமாக சில பொருள்களை சர்க்கார் பரிசோதகருக்கு அனுப்பவேண்டுமென திரு. பி. டபள்யூ. பெரேரா மாஜிஸ்டிரேட்டைக் கேடடுக் கொண்டார். மாஜிஸ்டிரேட் அவ்விதம் உத்தரவிட்டு வழக்கு விசாரணையை நவம்பர் 20-ம தேதிக்கு ஒததி வைத்தார். எதிரி ரிமாண்டில் வைக்கப்பட்டார்.

ஜிந்தும்பிட்டி தியேட்டரில்

இப்பொழுது

தினசரி மாலை 6 மணி இரவு 9-30 மணி

தண்டபாணிதேசிகர் - சாமா
மற்றும் பலர் நடிக்கும்

ஜெமினி நந்தனார்

என்னும் சிறந்த தமிழ் பேசும் படம்

ஈகிள் ஹவுஸ்

உயர்தர தாதுசத்துகளுள்ள பானங்களுக்கு இணையற்றது

தாதுசத்துக்கள் நிறைந்த கீழ்க்கண்ட எமது குளிர் பானங்களைக் கையிருப்பு வைத்திருக்கும்படி உங்கள் வியாபாரிகளைத் தூண்டுங்கள்:—

ஓரஞ்ச் பார்லி
லெமன் பார்லி
வைன்டோ
வைனோ
வினோ
பலதரப்பட்ட குளிர் பானங்கள்
பழ இரசங்கள்
டி ஸைடர்
சம்பேன் ஸைடர்
ஸ்பெஷல் ஸைடர்

தந்தி:- "ஈகிள் ஹவுஸ்" நிர். 41, பார்பர் வீதி,
போன்:- 2193 கொழும்பு.

ஏஜண்டுகள் இல்லாத பகுதிகளுக்கு ஏஜண்டுகள் தேவை

உங்கள் நோய் எதுவானாலும் சரி உத்தரவாதமாய் தீர்த்துத் தருகிறேன்.

வாழ்க்கையைப் பாழ்படுத்தும் கொடூரமான தொத்து வியாதி உள்ளவர்கள் தங்களுக்குப் பின்னால் நோயும் கஷ்டமும் அனுபவிக்கும் சந்தானத்தை தவிர வேறொன்றையும் நிலைக்கச் செய்வதில்லை. எனவே உங்களை பீடித்திருக்கும் கொடிய பிணிகளை அகற்றி சுகத்துடன் வாழ என்னுடன் கலந்து ஆலோசியுங்கள். இம்மாதம் எமதுஹெட் ஆபீஸ் 92 செட்டியாரதெரு கொழும்பில் தங்கி இருந்து நோயாளிகளுக்கு தகுந்த சிகிச்சை அளித்து உத்தரவாதமாய் தீர்த்துக் கொடுக்கிறேன்.

குறிப்பு:-

எமது யாழ்ப்பாண கிளை வைத்தியசாலை நவம்பர் மாதம் 19-ம் தேதி புதன்கிழமை காலை 6 மணி முதல் 9 மணிக்குள் வரும் சுப வேளையில் டான்லி ரோட் (வின்ஸர் படமாளிகைக்கு) அருகாமையில் அமைந்துள்ள கட்டிடத்தில் ஸ்ரீமதி ஆயிஷா ராஹுப் பி.ஏ. எல்.டி. அவர்களால் திறந்து வைக்கப்படும்.

AYUR. DR. V. K. S. செல்லப்பாபிள்ளை M. A. M. S. (கல்கத்தா)

சிவானந்த சித்தர் வைத்தியசாலை,
ஹெட் ஆபீஸ்: 92, செட்டியார் தெரு, கொழும்பு.
பிராஞ்சு ஆபீஸ்:
பதுளை, யாழ்ப்பாணம்.

இருமல் இளைப்பு சுகம்

T. B. & Asthma

இருமல், கபக்கட்டு, கபத்துடன் இரத்தம் விழுதல், மாலை நேரங்களில் சுரம் வருதல், உடம்பு இளைத்து வருதல், உள்ள [T. B.] க்ஷயரோகத்திற்கும், இளைப்பு, எங்கல், மூச்சுத்திணறல், பீனிசம், தடுமன் ஆகிய உபாதைகளுடன் கூடிய (Asthma) சுவாசகாசம் மந்தாரகாசத்திற்கும் நிகரற்ற சஞ்சீவி.

20 வருட அனுபவம் பெற்ற மருந்துகள். ஆயிரக்கணக்கான பேர்கள் சாப்பிட்டுச் சுகம்பெற்றது.

25 நாள் தாளகபஸ்பமும், சித்திர மூலச்சூரணமும் ரூபா 12-8-0

தண்டபாணி வைத்தியசாலை,

பெரியகடை வீதி, பழனி. (S. I.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org